விலை ரூபா 1-00

# ஈழநாடு
THE EELANADU

மலர் 24 சித்திரை 24 றஜப் 12 இதழ் 83
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 7—5—82

## டாக்டர் காயம்

(யாழ்ப்பாணம்)

நல்லூரில் நேற்றுப் பிற்பகல் இராணுவ ட்ரக வண்டியும், மோட்டார் சைக்கிளும விபத்துககுள்ளானதில் மோட்டார் சைககளில் பிரயாணம் செய்த டாக்டர் கே. சிவநேசன் காயமடைந்தார்.

வடபிராந்திய போக்குவரத்துச் சபையின தலைவரான திரு. எஸ். கனகரத்தினத்தின் மகனுன டாக்டர் சிவநேசன் காயமடைந்தவராவார், நேற்றிரவு யாழ. ஆஸ்பத்திரியில் அவசர சிகிச்சை அளிக்கப்பட்டது. அவரது கையில் முறிவு ஏற்பட்டதாகவும் ஆபத்து இல்லை என்றும் ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன.

## சந்தேக நபர்கள் கைது!

(மன்னர்)

சட்டவிரோதமாக எருமை மாடு வெட்டிய இரண்டு சந்தேக நபர்களை முருங்கன் பொலிசார் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்து வழக்கு தாக்கல் செய்தனர்

மன்னுர் வேப்பங்குளம் கிராமததிற்குவிரைந்த பொலிசார் வெட்டப்பட்ட எருமை மாட்டின் இறைச்சி, தோல், தசை என்பவற்றைக்கைப்பற்றியதுடன் 2 சந்தேக நபர்களையும் கைது செய்து மன்னுர் பதில் நீதவான் திரு. ஏ. சீமாம்பிள்ளைமுன் ஆஜர்செய்தனர். சந்தேக நபர்களை பிணையில் செல்ல அனுமதித்த நீதவான் மேல் விசாரணை ஒத்திவைத்தார்.

## பிரதம நீதியரசர் ராஜினுமா

மனிலா, மே 6

பிலிப்பைன்ஸில் சட்டப் பரீட்சையொன்று தொடர்பாகத் தெரிவிக்கப்பட்ட குற்றச்சாட்டையடுத்து அந்நாட்டின் பிரதம நீதியரசர் உட்பட பதினெரு உயர் நீதிமன்ற நீதியரசர்கள் ராஜினுமாச் செய்துள்ளதாக அறிவிக்கப்பட்டது.

நீதியரசர் ஒருவரின் மகளின் விடைத்தாள் மீளப்பரிசீலிக்கப்பட்டு புள்ளி வழங்கப்பட்

(8ம் பக்கம் பார்க்க)

# நெடுந்தீவில் ராணுவ முற்றுகை

# ஆறு பேர் கைது!

## றிவோல்வர்கள் கைப்பற்றப்பட்டன

(நெடுந்திவு)

நெடுந்தீவுத் துறைமுகத்தையும் அதனை அடுத்த பகுதியையும் நேற்று அதிகாலையில் திடீரென முற்றுகையிட்ட இராணுவத்தினர் அங்குள்ள சில வீடுகளில் தேடுதல் நடத்தியதுடன் முன்னுள் கிராம சபைத் தலைவர் உட்பட ஆறுபேரைக் கைதுசெய்தனர்.

நேற்று அதிகாலை 5 மணியளவில் கடற்படை வள்ளத்தில் வந்த சுமார் 40 இராணுவ வீரர்கள் துறைமுகத்தையும் அருகிலுள்ள வீடுகளையும் முற்றுகையிட்டதுடன் அங்கு நின்ற பிரயாணிகள், பொது மக்கள், தண்ணீர் எடுக்க வந்த பெண்கள் பஸ்ஸில் வந்தவர்கள் எல்லோரும் தடுத்து நிறுத்தப்பட்டனர்.

முதலில் துறைமுகத்துக்கு அருகிலுள்ள வீடொன்றைச் சோதனையிட்ட இராணுவத்தினர் அங்கிருந்து சில இளைஞர்களைக் கைதுசெய்தனர்.

பின்னர் அங்கு வந்த பஸ்ஸிலிருந்த பிரயாணிகளை இறக்கிய இராணுவத்தினர் அதே பஸ்ஸில் சென்று கிழக்கே மூன்றரை மைல் தூரத்தில் இருக்கும் முன்னுள் கிராமசபைத் தலைவர் த. அம்பலத்தையும் அவரது மகன் சுதாகரனையும் கைது செய்ததுடன் அவரது வீட்டையும் சோதனைசெய்தனர்.

இவர்களுடன் சி. கருணுநிதி, அ. ராஜயோகன், அ. பொன்னம்பலம் (சகோதரர்கள்), ஏ. சி. அழகரத்தினம் ஆகியோரும் கைதுசெய்யப்பட்டனர்.

இதன் காரணமாக நெடுந்தீவிலிருந்து காலை 7 மணிக்கு புறப்படவிருந்த வள்ளம் 10 மணிக்கே புறப்பட்டது.

இராணுவத்தினருடன் 3 பொலிசாரும் 3 கடற்படை வீரர்களும் வந்திருந்தனர்.

கைதுசெய்யப்பட்டவர்களிடமிருந்து றிவோல்வர்களும், போலி (விளையாட்டு) துப்பாக்கிகளும் கைப்பற்றப்பட்டுள்ளன.

## அடுத்தமாதம் 5 கப்பல்கள் காங்கேசன் வரும்

### இன்று நிலக்கரிக் கப்பல் வருகிறது

[மாவிட்டபுரம்]

சுமார் 4200 தொன் நிலக்கரியுடன் காங்கேசன்துறை துறைமுகத்திற்கு கப்பல் ஒன்று இன்று வருகிறது.

காங்கேசன் சிமெந்துத் தொழிற்சாலையில் உள்ள சூளைகள் எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக நிலக்கரிக்கு மாற்றப்பட்டதைத் தொடர்ந்து கல்கத்தாவிலிருந்து எம். வி. மேபிள்வுட் என்ற சிங்கப்பூர் கப்பல் 4200தொன் நிலக்கரியுடன் இன்று காங்கேசன் துறைக்குவருகிறது. இவ்வருடத்தில் காங்கேசன்துறைக்கு வரும் 4வது நிலக்கரிக் கப்பல் இதுவாகும். இக்கப்பலின் இறக்குமதி வேலைகளை ஜெயபாலசிங்கம் கம்பனியார் பொறுப்பு ஏற்றுள்ளனர்.

அடுத்தமாதம் சுமார் 20,000 தொன் நிலக்கரியுடன் ஐந்து கப்பல்கள் காங்கேசன் துறைக்கு வரஇருக்கின்றன.

## ★ மாலினி மர்ம மரணம்: விசாரணை தொடருகிறது

# சிவகுமாரின் பிணை மனு நிராகரிக்கப்பட்டது!

(யாழ்ப்பாணம்)

மாலினி மரண விசாரணையில், றிமாண்டில் வைக்கப்பட்டுள்ள சந்தேகநபர் சிவகுமாருக்கு வழங்கப்பட்ட விளக்கமறியல் உத்தரவை மறுபரிசீலனை செய்யுமாறுகோரி சமர்ப்பித்த விண்ணப்பத்தை யாழ் நீதவான் திரு.ரி. யோகநாதன நேற்று நிராகத்தார்.

விசாரணை இம்மாதம்14ம் திகதிவரை ஒத்திப்போடப்பட்டது.

யாழ். நீதிமன்றத்தில் நீதவான் திரு. ரி. யோகநாதன் முன்னிலையில் மாலினி மரண விசாரணை நடைபெற்றுவருகிறது.

ஆனையிறவு உப்புக் கூட்டுத்தாபன விடுதியில், கூட்டுத்தாபன கணக்காளர் மகேந்திரனின் மனைவி மாலினி மர்மமான முறையில் கடந்த மாதம் 14ம் திகதி மரணமடைந்தது தொடர்பாக இம்மரணவிசாரணை நடைபெற்று வருகிறது.

அன்றையதினம் மாலினியுடன் இருந்ததாக கூறப்படும் சந்தேகநபர் சிவகுமார் (வயது31) விசாரணை நடுவில்றிமாண்டில் வைக்கப்பட்டார்.

சந்தேகநபர் சார்பில் ஆஜரான சிரேஷ்ட சட்டத்தரணி என் சத்தியேந்திரா, விளக்கமறியல் உத்தரவை, மறுபரிசீலனை செய்யுமாறு கடந்த தவணையின்போது விண்ணப்பித்திருந்தார். இது தொடர்பான தீர்ப்பு நேற்று வழங்கப்பட்டது.

சந்தேகநபர் சார்பில் சட்டத்தரணிகளான ஆர். தவராசா, எஸ். கனகசபாபதி, செ. சிவபாதசுந்தரம் ஆகியோர் ஆஜரானுர்கள். மரணமான மாலினியின் நலனைக்கவனிக்க, சட்டத்தரணி ஜிம்மி ராசரத்தினம் ஆஜரானுர். பொலிஸ் தரப்பில் வவனியா உதவிப் பொலிஸ் அதிபர் திரு.பேர்ஸி விஜயநாயக்கா ஆஜரானுர்.

### ஜனத்திரள்

தீர்ப்பை அறிவதற்காக நீதிமன்றத்தின் உள்ளேயும், வெளியேயும் ஏராளமானேர் திரண்டிருந்தனர். நீதிமன்றத்தில் தீர்ப்பு தெரிவிக்கப்பட்ட பின்னரும் பெருந்திரளானேர் நீதிமன்ற வளவிற்குள்ளும், வீதியிலும் காணப்பட்டனர். வளவிற்குள் நின்றவர்களை பொலிசார் வெளியேற்றினுர்கள். பெண்கள் அதிகமாகக் காணப்பட்டனர்.

யாழ். நீதவான் தீர்ப்பில் மேலும் தெரிவித்திருப்பதாவது: ''இந்த மரண விசாரணையில 4 நாட்களுக்கு சாட்சியங்களின் சான்று பதிவுசெய்யப்பட்டபின் சிவகுமார் என்பவரை விளக்கமறியலில் வைக்கும்படி இந்த மன்று உத்தரவிட்டது. 4-5-82ல் சிரேஷ்ட சட்டத்தரணி திரு. என். சத்தியேந்திரா சிவகுமாரின் சார்பில் ஏற்பட்டு குற்றவியல் நடவடிக்கை சட்டம் 3ம் அத்தியாயத்தின் கீழ் விசாரணைசெய்யப்படுவதால் மாலினியின் மரணம் ஒரு தற்கொலையா, அல்லது விபத்தால் ஏற்பட்டதா அல்லது ஒரு கொலையா என்று முடிவுசெய்வதற்கு முன் சிவகுமார் என்பவரை விளக்கமறியலில் வைப்பது பிழை என்று வாதாடினுர்.

''ஏனெனில் இந்தவிசாரணை முடிவில் இது ஒரு தற்கொலை என்று தீர்ப்புக்கொடுக்கப்பட்டால் சிவகுமார் என்பவர் சட்டவிரோதமாக விளக்கமறியலில் வைக்கப்பட்ட ஒரு நிலை ஏற்படும் என்றும் மேலும் வாதாடினுர். அத்துடன் குற்றவியல் நடவடிக்கைச் சட்டம் 30ம் அத்தியாயத்தின் கீழ் இந்நீதிமன்றத்திற்கு ஒரு மரண விசாரணை அதிகாரிக்குக் கொடுக்கப்பட்ட அதிகாரங்களுக்குமேற்பட்ட அதிகாரங்கள் இல்லை என்றும் எடுத்துரைத்தார். மேலும் அவர் இந்தமரணவிசாரணையில் பொலிசார் கருசனை எடுக்கவில்லை என்றும் அவர்கள் மன்றிற்கு சந்தேக நபரை விளக்கமறியலில் வைக்கும்படி விண்ணப்பம் செய்திருக்க வேண்டுமென்றும், இந்த மன்றிற்குத் தன்னுடைய இஷ்டப்படி சிவகுமாரனை விளக்கமறியலில் வைக்கமுடியாது என்றும் வாதாடினுர்.

எனது அபிப்பிராயப்படி இந்த விசாரணைக்குமுன் பொலிசார் இந்தச்சம்பவம் நடந்த வீட்டை முத்திரையிட்டு இரசாயனப்பகுப்பாளரையும் கைவிரல் அடையாள நிபுணரையும் அழைத்து அங்கு காணப்பட்ட சான்றுப் பொருட்களைப் பார்வையிட்டு அறிக்கை சமர்ப்பித்திருக்க வேண்டும். ஆனுல் அவர்கள் அப்படிச் செய்யவில்லை. மகேந்திரன் சிவகுமாரை முதலில் சந்தேகிக்கவில்லை. நான்கு நாட்களுக்கு இந்த விசாரணை நடத்தியபொழுது சிவகுமாருக்கு எதிராக நியாயமான சந்தேகம் இந்தமன்றுக்கு ஏற்பட்டது.

(5-ம் பக்கம் பார்க்க)

## ஆலய புனரமைப்பு 30 கோடி ரூபா

சென்னை, மே.6

தமிழ் நாட்டிலுள்ள ஆலயங்களைப் புனரமைப்பதற்காக 30 கோடி ரூபாவை செலவிட தமிழ்நாடு அரசு தீர்மானித்துள்ளது. ]வெ]

## இ. காங்கிரஸ் உறுப்பினர் இருவர் சுட்டுக்கொலை

சென்னை, மே 6

மேற்கு வங்காளத்தில் சட்டசபை பிரசாரத்தை முடித்துக் கொண்டுவிட்டு திரும்பிய இரண்டு இந்திரா காங்கிரஸ் உறுப்பினர்கள் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

இச்சம்பவத்தின்போது ஒருவர் பலத்த காயமடைந்ததாகவும், வேட்பாளரொருவர் உயிர் தப்பியதாகவும் அறிவிக்கப்பட்டது.

நவீனமுறையில் சுகாதாரமாகத் தயாரிக்கப்பட்ட
பனைவெல்லம்
விற்பனைக்கு உண்டு
இன்றே நாடுங்கள்
கற்பகம்
(யாழ். பஸ் நிலையத்திற்கு அருகாமை)
தலைவர்
பனம் பொருள் அபிவிருத்திச்சபை
3111

மணிவாக்கு

பிறந்தோர் உறுவது பெருகியதுன்பம்
பிறவார் உறுவது பெரும் பேரின்பம்
பற்றின் வருவது முன்னது; பின்னது
அற்ருேர் உறுவது அறிக.

— மணிமேகலை

# நமது நோக்கு

## நோயிலும் மோசமானது மருந்து

விவசாய அமைச்சை வருத்திவந்த நோய்க்கு, அதன் அமைச்சரை இட மாற்றம் செய்வது தகுந்த நிவாரணமா? சந்தேகம்.

ஜெனிவாவில் உலகசுகாதார நிறுவனத்தின்மாநாட்டில் பங்கு பற்றிக்கொண்டிருந்த அமைச்சர் காமினி ஜெயசூரியா அவசரமாகக் கூப்பிடப்பட்டார்; விவசாய அமைச்சராக சத்தியப் பிரமாணம் செய்துகொண்டார். பல அலுவல்கள் சுகாதாரஅமைச்சில் அவருடைய திறமையை எதிர் பார்த்திருந்தன.

பிரச்னைக்குள்ளான விவசாய அமைச்சர் திரு. ஈ. எல். சேனநாயக்கா சுகாதார அமைச்சராக இடம் மாறிக்கொண்டது பற்றிப் பெருமிதம் தெரிவித்துள்ளார். அது தமக்குத்தகுந்த அமைச்சென்பது அவருடைய கருத்து.

ஜனநாயகம் சில வேளைகளில் 'சனி' நாயகமாகவும் காட்சியளிப்பதுண்டு; அதுவும் அட்டமத்துச்சனியென்ருல் தொட்டதெல்லாம் தூளாகப்போய்விடும் என்பார்கள். விவசாயம் வேறு; 'விபச்சாரம்' வேறு என்பதை மக்கள் அறிவர்.

இன்று நடைபெற்று முடிந்த உபஅமைச்சர் குழு விசாரணையும், அதன் விளைவான அமைச்சர்கள் மாற்றமும், ஜனுதிபதிணைக்களம் விடுத்துள்ள அறிக்கையும் எந்தப் பாமரர்களுக்கும் இலகுவில் புரியக்கூடிய விவகாரங்கள். திறமைசாலி ரஞ்சன் விஜயரத்தினவின் நேர்மை ஜனுதிபதியால் காப்பாற்றப்பட்டது.

அமைச்சரவையின் அனுமதியின்றிகேள்விப்பத்திரங்கள் வழங்கப்பெற்ற ஒழுங்கீனம் எவ்வளவு தூரம் விவசாய அமைச்சின் அலுவல்களைப் பாதித்ததென்பது ஒரு மூடு மந்திரம்; அதற்குப் பொறுப்பான அமைச்சர் தாஞகவேஉடனடியாக ராஜினுமாச் செய்வதே ஜனநாயக ஆட்சிக்கு அழகான செயல்; இந்த நாட்டில் அந்த வழக்கம் எப்பவாவது உண்டா?

நடந்தது என்ன? தாம் முன்பு பொறுப்பேற்றிருந்த சுகாதார அமைச்சுக்கு, விரும்பிப் போவதாகவும், அங்கு தமது திறமை கூடிய பலனளிக்கும் என்ற நம்பிக்கை தொனிக்க பாராளுமன்றத்தில் அமைச்சர் சேனநாயக்கா உரைநிகழ்த்தியிருந்தார்; விவசாய அமைச்சின் குழப்பத்தைப் பற்றி ஒரு விரிவான அறிக்கை சமர்ப்பிப்பதாக தெரிவித்திருந்தார்; அது 'வெள்ளை' அறிக்கையா?

அது எவ்வாருயினும் நாட்டுக்கு கவலை கொடுப்பது டாக்டர்கள் பிரச்னை; வருவாய் குறைந்த ''மருத்துவத் தொழிலைப்போல் பயங்கரமானது வேறெதுவும் இல்லை'' என்கிருர் அறிஞர் ஷா. இதனை விபரிக்க வேண்டியதில்லை. இதன் உண்மையை உணர்ந்த மாஜி சுகாதார அமைச்சர் காமினி ஜெயசூரியா அரசாங்க டாக்டர்கள் சங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தவும் நிலைமையைச் சீராக்கவும் உறுதிசெய்திருந்தார்; தகுதி வாய்ந்த ஒருவரின் உறுதி மொழி.

நாட்டின் உயிரெனக் கருதப்படும் மருத்துவ சேவையின் நீண்டகாலகுழப்பநிலை அமைச்சரின் அனுதாப நோக்குடனும் டாக்டர்கள் சங்கத்தின் ஒத்துழைப்புடனும் நீங்கிவிடுமென்ற நம்பிக்கை நிலவிவந்தது.

இந்த அமைச்சர்கள்மாற்றம் இரண்டையும்கெடுத்த நிலையை உருவாக்குமா? இது பொதுமக்களின் நியாயமான அச்சம்.

உணவுடனும் உயிருடனும் சூதாடுதல் அபாயம்.

## இரும்பும் உருகும்

நான்காவது நாள் யுத்தத்தில் 1000 துருப்புக்களுடன் மூழ்கடிக்கப்பட்ட ஆர்ஜென்டீனுவின் இரண்டாவது பெரிய யுத்தக்கப்பல் அளித்த பெருவெற்றி பற்றி பெருமிதமடைந்த பிரிட்டன் இன்று மண் கவ்வி கண்ணீரும் கம்பலையுமான நிலையில் காணப்படுகின்றது.

ஆத்திரமடைந்த ஆர்ஜென்டீனு தனது ஏவுகணைகள் மூலம் பிரிட்டனின் மிக நவீனமான யுத்தக்கப்பல்களில் ஒன்ருன 'ஷெபீல்ட்' என்ற பெயருடைய 3500 தொன் நிறைகொண்ட போர்க்கப்பலை மூழ்கடித்துவிட்டது.

பிரிட்டிஷ் ஆனையும், ஆர்ஜென்டீனு 'பூனையும்' என்ற பல்லவி பொய்யென நிருபிக்கப்பட்டு விட்டது. ஆர்ஜென்டீனுவுக்கு பரந்த அனுதாபமும் ஆதரவும் உண்டு.

பிரிட்டன் முழுவதிலும் சோகமயமான காட்சி. இரும்புப் பெண் - பிரதமர் தட்சர் உருகுவதாகச் செய்திகள் சொட்டுச் சொட்டாக வெளிவருகின்றன. சண்டைக்கப்பல் மட்டுமல்ல, இன்னெரு கப்பல், இரண்டு விமானங்கள் ஒரு 'பைலற்' சேதத்தில் சிக்கியிருப்பதாக அறிவிக்கப்படுகிறது. பிரிட்டிஷ் பாராளுமன்றம் அதிர்ச்சி அடைந்திருக்கிறது.

1000 பேர் கொண்ட ஆர்ஜென்டீனு கப்பலைத் தகர்த்த பிரிட்டனுக்கு இந்தத் தாக்குதல் நல்ல படிப்பினையாகுமா? கப்பலிலிருந்த 280 பேர்களில் 30பேர் கொல்லப்பட்டதாக பிரிட்டிஷ் பாதுகாப்பு அமைச்சர் கருதுகிருர். ஆர்ஜென்டீனுவில் வாழும் பிரிட்டிஷ் மக்களின் கதி என்ன?

1956ல் சுயஸ் கால்வாய் நெருக்கடியில் ஜனுதிபதி நாசரிடம் நல்ல 'அடி' வாங்கிப் பின்வாங்கி ஓடிய பிரிட்டன் அன்றைய பிரதமர் அந்தனி ஈடன் அவர்களை அஞ்ஞாதவாசத்துக்கனுப்பியது.

இதனை மறந்த இன்றைய பிரதமர் தாமொரு 'சேர்ச்சில்' போன்ற போர் வீரர் பரம்பரையை மீண்டும் புனரமைக்கும் கனவில் தம்மை மறந்திருந்தார். போலிக் கௌரவத்தில் ஆசைப்படுகிருர்.

எதிர்பாராத இந்தப் பேரிடி ஆர்ஜென்டீனுவில் வதியும் ஆயிரக்கணக்கான பிரிட்டிஷ் மக்களின் பாதுகாப்புப்பற்றி ஞாபகப்படுத்தும்.

உலகமெங்கும் யுத்தபயத்தினுல் பீடிக்கப்பட்டிருக்கும் இவ்வேளையில் 'பல்லு விழுந்த' கிழட்டுச்சிங்கம் 'வயதுவந்த தேவடியாள்' தன் வாலைப்பருவத்தை நினைவுற்றது போன்று ராணுவ நடனத்தில் பிரிட்டன் நம்பிக்கைவைத்திருக்கிறது.

மூன்ரும் உலக நாடுகள் ஐரோப்பிய நாடுகள், அமெரிக்க நாடுகள், ஐ. நா.- இவற்றின் ஏகோபித்த குரலை மதித்து யுத்தத்தை உடனடியாக நிறுத்த முடியுமாஞல் இன்னும் கழராத பிரிட்டிஷ் சாயம் பாதுகாப்பாக இருக்கமுடியும்.

# "தமிழன் உலகில் அடிமையாக வாழும் நிலை மாற வேண்டும்"

### பாரதி விழாவில் கலாநிதி இராமகிருஷ்ணன்

(சுழிபுரம்)

''தமிழன் உலகில் அடிமையாக வாழ்வதும் இழிவான தொழில்களை செய்துவரும் நிலைமையும் ஒழியவேண்டும்'' என யாழ்ப்பாண பல்கலைக் கழக மெய்யியற்றுறைத்தலைவர் கலாநிதி வே. இராமகிருஷ்ணன் கூறினுர், காரைநகர் இந்துக்கல்லூரியில் நடைபெற்ற பாரதி நூற்ருண்டு விழா மூன்ரும்நாள் நிகழ்ச்சிக்குத்தலைமைவகித்து அவர் மேலும்உரைநிகழ்த்துகையில்:

''பாரதியாருக்கு விழாஎடுக்கும் நாம் முதலில் எம்மைச் சுத்தம் செய்துகொள்ளவேண்டும். தமிழன் உலகில் அடிமையாக வாழ்வதுடன், இழிவான தொழில்கள் செய்து வரும் நிலமை. ஒழியவேண்டும். 'திறமையான தொழில்கள் செய்து வாழ்வோம் இந்த நாட்டிலே' என்று பாரதி பாடினுன். தனது சொந்த நாட்டில் வாழ்வது தான் மேன்மை, அதற்காக உழைப்பதுதான் நமது கடமையுமாகும். தமிழன் எங்குவாழ்ந்தாலும் அடிமையாக வாழாது இழிவான காரியங்களைச் செய்யாது வாழவேண்டும் என்பதே எனது விருப்பமாகும். இதற்க்கு பாரதியார் வழி காட்டியாக விளங்குகின்ருர். என்று கலாநிதி இராமகிருஷ்ணன் கூறினுர்.

பண்டிதர் மு. க. வேலாயுத பிள்ளை வரவேற்புரை நிகழ்த்தினுர். கலாநிதி வே. இராமகிருஷ்ணன் மேலும் பேசுகையில் இந்திய நாட்டுதலைவர்களுக்கு அங்குள்ள மக்கள் தக்க மதிப்புக்கொடுத்து வாழ்கின்றனர். ஆனல் இலங்கையில் அப்படி இல்லை' தலைவர்களை மிகவும் இழிவாகவும், மதிக்காமலும் இருப்பதைகண்டு கொள்ளலாம். இந்த நிலைமை மாற வேண்டும். முதலில்நாம் நம்மவரை மதிக்கவேண்டும். பாரதியார் இதற்கும் ஒரு உதாரண புருஷராவர் சுதந்திரப் போராட்டத் தலைவர் காந்தியை மகாத்மா காந்தி என்று ஏற்றிப்போற்றினுர். இவ்வாருக யாவற்றுக்கும் பாரதியார்எமக்குஒரு உதாரணபுருஷராக வாழ்ந்ததைநாம் கண்டு கொள்ளலாம் என்ருர்.

பாரதி காட்டிய இறைவழிபாடு என்னும் விடயமாக தமிழக அருள்மெழியரசி கலாநிதி புலவர் பொன் தெய்வநாயகிசோதி உரையாற்றினுர். கலைநிகழ்ச்சிகளும் இடம் பெற்றன.

## "உ.அ.அதிபருக்கு ஜீப் வண்டி வேண்டும்"

(மட்டுவில்)

நானூறுக்கும் அதிகமான அபிவிருத்தி மன்றங்களுக்காக தினம் இருபத்திநான்கு மணி நேரத்தையும் எமது உதவிஅரசாங்க அதிபர் மக்களுக்காகத் தியாகம் செய்கிருர். அவருக்கு ஒரு ஜீப்வண்டி கொடுக்கப்பட வேண்டியது அவசியம்.

இவ்வாறு யாழ். மாவட்ட சாவகச்சேரி கிராமப்பிரதேச அபிவிருத்தி சங்கங்களின் சமாஜம், சமாஜக் கூட்டத்தில் ஒரு பிரேரணையை ஏகமனதாக நிறைவேற்றியது. இத்தீர்மானம் உள்ளூராட்சிஅமைச்சுக்கு அனுப்பிவைக்கப்பட்டது.சமாஜத் தலைவர் திரு. சதா நடராஜா தலைமையில் நடந்தகூட்டத்தில் அப்பிரேரணை நிறைவேற்றப்பட்டது.

### க. பொ. த. (சாதாரணம்)

## கணிதபாடத்தில் இவ்வருடம் விதிவிலக்குக் கிடைக்குமா?

(யாழ்ப்பாணம்)

க. பொ. த. (சாதாரண) தரப் பரீட்சை 1981 மார்கழி பரீட்சை முடிவுகளின்படி பெருந்தொகையானேர்கணித பாடத்தில் சித்தியெய்தத் தவறியமையால் கடந்த வருடத்தில் அளிக்கப்பட்ட சலுகையான கணித பாடத்தில் சித்திபெருவிடினும்க.பொ.த. உயர்தர வகுப்புப் படிக்கலாம் என்ற அனுமதி இவ்வருடத்திற்கும் வழங்கப்படுமா என்ற கேள்வி எழுந்துள்ளது.

இம்முறை பரீட்சை முடிவுகளின்படி பிரபலியமானபாடசாலைகளில் கூட க. பொ. த. உயர்தர வகுப்புக்குப்போதிய மாணவர்கள் இல்லை எனத் தெரியவருகிறது. பாடசாலைகளில் உயர்தர வகுப்புக்கு மாணவர்களை அனுமதிப்பது தொடர்பாகக் கல்வித்திணைக்களமே நிபந்தனைகளை விதிக்கிறது. ஆனல் பல்கலைக்கழக அனுமதிக்கு க. பொ. த. சாதாரண தரத்தில் ஆறுசித்திகளே போதுமானதாக உள்ளது, பாடசாலைகளில் இடநெருக்கடியைத் தவிர்ப்பதற்காகவே உயர் நிபந்தனைகள் கோரப்படுவது வழமை. எனவே இம்முறை ஆறுபாடத்தில் சித்தியும் மூன்று திறமைச் சித்தியு தேவை என்ற நிபந்தனையிலும் மாற்றம் வரலாம் என எதிர்பார்க்கப்படுகிறது, அதே வேளை பல்கலைக் கழகத்திற்கான புதிய அனுமதி நிபந்தனைகளின்படி சாதாரணதரம் நோக்கப்படாது உயர்தரபேறுகளுக்கே முக்கியத்துவம் கொடுக்கப்படுவதால் க. பொ. த. (சாதாரணத்தில்) சாதாரண சித்திகளைப் பெற்ற எவரும் தனிப்பட்ட பரீட்சார்த்தியாக க. பொ. த. உயர்தர பரீட்சைக்குத் தோற்றலாம்.

அத்துடன் வர்த்தகம் பயில்வதற்கு க. பொ. த. சாதாரணத்தில் சமூகக்கல்வியில் திறமைச்சித்தி வேண்டுமெனக் கல்வித்திணைக்களம் நிபத்தனை விதிப்பதினுல் உயர்தர வகுப்பில் பொருளியல், அரசியல், விஞ்ஞானம் போன்ற பாடங்களைப் பயில்வதற்கு மாணவர்கள் அவதியுறுகின்றனர். அதே வேளை விஞ்ஞானம் அல்லது கணிதத்திற்கே திறமைச்சித்தி தேவை என விஞ்ஞானப்பிரிவு அனுமதிக்கு நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது. இதைப் போன்றே வர்த்தக, கலைப்பிரிவுகளுக்கும் ஒரு சில பாடங்களில் திறமைச்சித்தி பெற்ருல் போதுமெனத் திருத்தம்வருவது நல்லதென பல மாணவரும் பெற்ருேர்களும் விரும்புவதாகத் தெரிகிறது.

(ப-அ)

## எண்சோதிட மறுமலர்ச்சியும் 8 எண் காரரும்

''எண் சோதிடம் மறுமலர்ச்சியுற்றதன் விளைவாக கடந்த சில வருடங்களாக சிறுசிறு புத்தகங்களாகவும் பத்திரிகைகள் மூலமாகவும் வெளியிடப்பட்டஎண்சோதிட விளக்கங்களை வாசித்த மக்கள் அற்ப ஆயுள் அகால மரணம், கர்மநோய், விபத்து என்பனவற்றின் தாக்கங்கள் 8 எண் காரர்களுக்குத்தான் என்றும் 8 எண் சிலரை உயர்த்தும் சிலரை தாழ்த்தும் என்றும் கூறி வருவதை அவதானிக்கக்கூடியதாய் இருந்தது என்று ஆரம்பிக்கும் இந்நூல் ஆசிரியர் எட்டு எண் காரருக்கு ஏற்பட்ட குழப்பங்களை நீக்கித் தெளிவு ஏற்படும் வகையில் இந்நூலை ஆக்கி இருக்கிருர்.

''இத்தாக்கங்கள் 8 எண் காரருக்கு மட்டுமல்ல 1 முதல் 9 எண் வரையிலான எல்லா எண் காரருக்குக்கூட சில எண் சோதிட விதியின்படி ஏற்பட வாய்ப்புண்டு என்ற இவரது கருத்து விஞ்ஞான ரீதியாக ஏற்றுக்கொள்ளக் கூடியதாக வுள்ளது.

திருமதி எம். நாகராசாவினுல் எழுதப்பெற்ற இந் நூல் 8 எண் காரருக்கு தர்க்க ரீதியாக ஏற்றுக் கொள்ளக் கூடிய உண்மைகளைக் கூறுவதோடு அவர்களுக்கு ஒரு வழிகாட்டியாவும் உள்ளது. இதன் விலை 10 ரூபா 40 சதமாகும்

## பௌர்ணமி கலைவிழா

[யாழ்ப்பாணம்]

ஆனைக்கோட்டை, ஆறுகால் மடம் அறிவொளி சனசமூக நிலையத்தினரின் இரண்டாவது பௌர்ணமி கலைவிழா இன்று நிலையத்தலைவர் திரு. சி. க. தம்பிராசா தலைமையில் நடைபெறும்.

இக்கலைவிழாவில் தமிழர் சுயாட்சிக் கழகத்தைச் சேர்ந்த திருவாளர்கள் வ. நவரத்தினம், ந. ஸ்ரீகாந்தா ஆகியோர், தமிழ்மக்கள் வாழ்வில் சுயாட்சிக் கோரிக்கை எழுந்த காலகட்டம் என்னும் பொருளில் உரையாற்றுவார்கள்,[கி]

## பரிசளிப்புவிழாவும் நிறுவுநர் தினமும்

[யாழ்ம்பாணம்]

காங்கேசன்துறை நடேஸ்வராக்கல்லூரியின் பரிசளிப்பு விழாவும் நிறுவுநர் நினைவு வுழாவும் எதிர்வரும் 10ந் திகதி திங்கட்கிழமை மாலை நடைபெறவிருக்கின்றது

இவ்வைபவத்தில் எதிர்க்கட்சித்தலைவர் திரு. அ. அமிர்தலிங்கமும் பாரியாரும் பிரதம அதிதியாகக் கலந்துகொள்வர்.

நிறுவுனர் நினைவுப்பேருரைன்ரை மகாஜனக் கல்லூரி அதிபர் திரு. பொ. சோமசுந்தரம் நிகழ்த்துவார்.

மாணவர்களது கலைநிகழ்ச்சிகளும் இறுதியாக இடம்பெறவுள்ளன [கி]

# 'பொலிஸ், இராணுவம் தாம் விரும்பியபடி நடக்க லைசென்ஸ்!'

## சட்டவிலக்குரிமைச் சட்டமூலம் வழிவகுக்கிறது என்கிறார் 'சிவா'

(கொழும்பு)

சட்ட விலக்குரிமைச் சட்ட மூலத்தின் வாயிலாகப் பொலிஸாருக்கும், இராணுவத்தினருக்கும் அவர்கள் விரும்பியபடி நடக்க அரசு 'லைசென்ஸ்' வழங்குகிறது. எனவே இதனை மீளாய்வுசெய்து இச்சட்ட மூலத்தை வாபஸ் பெறவேண்டும்.

இவ்வாறு நல்லூர் எம். பி. திரு.எம்.சிவசிதம்பரம் நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் உரையாற்றுகையில் கூறினார்.

சட்ட விலக்குரிமைச் சட்ட மூலத்தின் 2வது வாசிப்பின் மீதான விவாதத்தில் திரு. சிவசிதம்பரம் மேலும் பேசுகையில் கூறியதாவது: .

இச்சட்ட மூலத்தைத் தமிழர் விடுதலைக் கூட்டணி கொள்கை அடிப்படையில் முற்றுமுழுதாக எதிர்க்கிறது.

இச்சட்ட மூலம் 77ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 1ந் திகதி முதல் 31ந் திகதி வரையிலான காலப்பகுதியில் இடம்பெற்ற சில சம்பவங்கள் தொடர்பானவை. இது நீதித்துறையில் தலையிடுவதாக அமைகிறது.

நீதித்துறையில் அரசுக்கு நம்பிக்கை இருக்குமானால் சுகாதார அமைச்சரின் நடவடிக்கையுடன் தொடர்புடைய இச்சட்ட மூலத்துக்கு எதுவித அவசியமில்லை.

### யாழ். சம்பவங்கள்...

கடந்த ஆண்டு ஜூன் மாதம் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற சில சம்பவங்கள் தொடர்பாக இராணுவ-பொலிஸ் அதிகாரிகளுக்கு எதிராகச் சில வழக்குகள் தாக்கல்செய்யப்பட்டுள்ளன. இந்த வழக்குகள்கூட இந்தச் சட்ட மூலத்தின் மூலம் ரத்துச்செய்யப்படலாம்.

இதுபோன்று பயங்கர முன்மாதிரி ஒன்றை அரசு இச்சட்ட மூலத்தின் மூலம் காட்ட முயற்சிக்கிறது. இதனைப் பயன்படுத்தி எதிர்காலத்திலும் பலர் சட்டத்தின் பிடியிலிருந்து தப்பிக்கொள்ளலாம். (ம-இ)

## எல்சல்வடோரில் புதிய அமைச்சரவை

லண்டன், மே. 6

எல்சல்வடோரில் 15 உறுப்பினர்களைக் கொண்ட மந்திரி சபை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. (க)

## 'மக்கள் மாடி'

(கொழும்பு)

பொலிஸ் தலைமைக்காரியாலய 4வது மாடியின் கீழ்மாடி 'மக்கள் மாடி' என அழைக்கபடவுள்ளது.

இம்மாதம் 11ம் திகதி செவ்வாய்க்கிழமை இந்த மாடியை பொலிஸ்மா அதிபர் திரு. ருத்ரா இராஜசிங்கம் திறந்து வைப்பார். பொலிஸ்தலைமைக் காரியாலயத்துக்கு வரும் மக்களின் நன்மை கருதியே இது திறக்கப்படுகிறதாம்.

கடந்த பல வருடங்களாக 4வது மாடி பொலிஸ் விசாரணைக்கு பிரபல்யமானதாகவும் மக்கள் மத்தியில் 4வது மாடியை பற்றிஅடிக்கடிபேசப் படுவதும் தெரிந்ததே. (கு)

# "காச நோயை ஒழிப்பதில் மா.அ.ச. முயல வேண்டும்"

## யாழ். மேயர் வேண்டுகோள்

அரியாலை!

"காச நோயை முற்றாக ஒழித்துக்கட்டுவதில் தனி ஒருவர் கூடத்தனித்து முயற்சி செய்யலாம். மக்கள் சமுதாயத்தை நோயிலிருந்து காப்பாற்றுவதும் நோய் மேலும் பரவாமல் தடுப்பதும் சிறந்த சமூக சேவையாகும் நாங்கள் இந்த நோய்க்கு எதிராகத் தனித்தும் குழுவாகவும் செயல்படவேண்டும். இலங்கைத் தேசிய கயரோகத் தடுப்புச்சங்கத்தின் யாழ்ப்பாணக் கிளையினர் இந்தக் கொடிய நோயை மக்கள் மத்தியிலிருந்து நீக்குவதற்கு ஆற்றி வரும் அளப்பரும் சேவை பாராட்டுக்குரியது"

இவ்வாறு யாழ்.மாவட்ட அபிவிருத்திசபைச் செயலாளரும், யாழ். அரசாங்க அதிபருமான திரு. தேவநேசன் நேசையா இலங்கைத் தேசிய கயரோகத் தடுப்புச்சங்கத்தின் யாழ்ப்பாணக்கிளையின் பரிசளிப்பு விழாவில் பிரதம அதிதியாகக்கலந்து கொண்டு பேசுகையில் குறிப்பிட்டார்.

வைத்திய கலாநிதி செ.இந்திரராஜா தலைமையில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் யாழ்ப்பாண மாநகர முதல்வர் திரு இராசா விசுவநாதன் பேசுகையில் கூறியதாவது

"உழைத்து வாழ விரும்புவோர் நோயற்று வாழ வேண்டும். நோய்களுக்கு வேண்டிய மருந்துக்கள் கண்டுபிடிக்கப்படாத காலத்தில் மக்கள் நோய்களினால் பெருந்தொகையாக இறந்தனர். ஆனால் இன்று நோய்களுக்கு வேண்டிய மருந்துகளும வழிமுறைகளும் ஏராளமாக இருக்கின்றன.

"இலங்கை அரசு நிர்வாகத்தைப் பரவலாக்கவே மாவட்ட அபிவிருத்திசபைகளை அமைத்திருக்கிறது. இந்த மாவட்ட அபிவிருத்திச்சபைகள் பதினைந்து விடயங்களில் முக்கியமாகச் செயல்படவேண்டுமென அரசுஆலோசனை செய்து வருகிறது. இந்த ஆலோசனைகளுக்குள் சுகாதாரமும் அடங்கும். செயல் திட்டம் நடைமுறைக்கு வந்தபின்னர் யாழ். மாவட்ட அபிவிருத்திசபை மூலம் போதிய நிதியைப் பெற்று இந்தக் காசநோயை முற்றாக ஒழிக்கச் தீவிர நடவடிக்கைகளை எடுக்க இச்சபை முயற்சி செய்ய வேண்டும்."

விழாவிற்குத் தலைமை வகித்த வைத்திய கலாநிதி செ. இந்திரராஜா பேசுகையில் கூறியதாவது;

'துப்பலால் வரும் நோய்கள் சம்பந்தமான சுவரொட்டிப் போட்டியொன்றை எமது சபைநடாத்திய பொழுது இப்போட்டிதல் யாழ்ப்பாணத்திலுள்ள ஒன்பது பாடசாலைகளே பங்கெடுத்தன. துப்பலால் பெருமளவு காசநோய்க் கிருமிகள் பரவுகின்றன. இந்த நோயைக் கட்டுப்படுத்த அரசாங்கம் போதிய உதவிகளை வழங்கிவருகிறது. ஆனால் மக்கள் இவைகளைப்பயன்படுத்துகிறார்களில்லை,

"ஒருவருக்கு இரண்டு வாரம் தொடர்ந்து இருமல் இருந்தால் அவருக்குக் காச நோய் இருக்கலாம் முதலில் அவர் தனது சளியைச் சோதித்து அறிய வேண்டும். யாழ்ப்பாணத்தில் பத்தாயிரம் பேர்களில் ஏழு பேருக்கும் இலங்கை முழுவதிலும் பத்தாயிரம் பேருக்கு 3.8 வீதமானோருக்கும் இந்த நோய் இருக்கிறது எனஅறியக் கிடக்கிறது சனசமூக சமூக சேவை இயக்கங்களின் பூரண ஒத்துழைப்பின் மூலமே நாம் நோயுள்ளவர்களைக் கண்டுபிடிக்க முடியும். மட்டக்களப்புப் பகுதியில் நோயாளர்கள் தமக்குக்கிட்டவுள்ள வைத்தியசாலைகளுக்குச் சென்று தமது சளியைச் சோதிப்பிக்கின்றனர். ஆனால் யாழ்ப்பாணத்தில் இப்படியான வசதிகள் இருந்தும் அங்கு போய்ச் சோதிக்காமல் பண்ணை வைத்திய சாலைக்கே தினமும் வருகின்றனர். இதனால் உண்மையான நோயாளர்களை நாம் கண்டுபிடிக்க முடியாமல் இருக்கிறது".

யாழ்ப்பாணம் பிரதம கல்வி அதிகாரி திரு. வெ. சபாநாயகம் பேசுகையில்: "பாடசாலைகளில் படிக்கும் பிள்ளைகள் மூலமே சமுதாயத்தில் நல்ல காரியங்களைப் பரப்ப முடியும். இதனாலேயே பல இலாகாக்கள் கல்லூரிகளில் மாணவர்களின் உதவிகள் வேண்டி எமது இலாகாவுக்கு வருகின்றனர். சுமார்நாற்பது வருடங்களுக்கு முன்னர் காசரோகம் ஒருவனைப் பீடித்துவிட்டால் அவன் தீண்டப்படாதவன் என்று ஒதுக்கித் தள்ளப்பட்டான். ஆனால் இன்று அந்த நிலைமை மாறி இந்த நோயினால் பீடிக்கப்பட்டவர்கள் போதியவைத்திய சிகிச்சையின் மூலம் நோய் முற்றாகமாறி கடமைகள் புரிகின்றனர். மக்களின் ஒத்துழைப்பின் மூலமே இதனை ஒழித்துக்கட்டமுடியும்" என்றார்

திருமதி அந்தோனிடா சுவாமிநாதர் பேசுகையில், "காசரோகத்தை தடுப்பதில் எமது சேவை போதுமானதாக இல்லை. துர்ப் பழக்கத்தினாலும் போஷாக்குக் குறைவினாலும் இந்த நோய் பெருமளவில் பரவுகிறது. சமூக சேவை இலாகா மூலம் காசநோயாளருக்குத் தற்பொழுது வழங்கி வரும் நிதியுதவி போதாது" என்றார்.

யாழ். மாவட்ட சனசமூக நிலையச் செயலாளர் திரு. சி. சி. வரதராசாவும் பேசினார்.

சுவரொட்டிப் போட்டிகளில் வெற்றிபெற்றோருக்கான பரிசில்களை அரசாங்க அதிபர் திரு. தேவநேசன் நேசையா வழங்கினார்கள்.

யாழ்ப்பாணக் கிளைச் செயலாளர் திரு. எம். கி. தில்லைநாயகம் நன்றிதெரிவித்துப் பேசினார். [அ]

## அனுமதியின்றி கள் வைத்திருந்த இருவருக்கு ரூ. 50 அபராதம்

(மட்டுவில்)

அனுமதியின்றி வீட்டில் கள் வைத்திருந்ததாக குற்றம் சாட்டப்பட்ட இருவருக்கு சாவகச்சேரி மாவட்ட நீதிபதி தலா 50 ரூபா அபராதம் விதித்தார். அபராதம் செலுத்தத்தவறினால் இருவார கடூழிய சிறைத்தண்டனை அனுபவிக்கும் படியும் உத்தரவிட்டு தீர்ப்பளித்தார்.

மீசாலைப்பகுதியை சேர்ந்த எஸ். ஐயாக்குட்டி, எஸ். பொன்னன் என்ற இருவருக்குமே நீதிபதி இந்த அபராதத்தை விதித்து தீர்ப்பளித்தார். இவர்கள் மீது சாவகச்சேரி கலால் பகுதியினர் குற்றம்சாட்டி வழக்குத் தொடர்ந்திருந்தனர். எதிரிகள் குற்றத்தை ஒப்புக்கொண்டதைத் தொடர்ந்தே நீதிபதி இப்படித் தீர்ப்பை வழங்கினார்.

## அமெரிக்காவின் போக்குக்கு சோவியத் கண்டனம்

மாஸ்கோ, மே. 6

தென் அத்திலாந்திக் நெருக்கடியில் அநாவசியமாக அமெரிக்கா தலையிடுவதாக முதல் தடவையாக நேற்றுமுன்தினம் சோவியத் அதிபர் திரு.லியோனிஸ்ட் பிரஸ்னேவ் கண்டனம் தெரிவித்தார்.

அமெரிக்கா சந்தர்ப்பத்தை பயன்படுத்தி தென்அமெரிக்காவில், இராணுவ பொருளாதாரத்தை விஸ்தரிக்கவும் செல்வாக்கை பிரயோகிக்கவும் முயற்சித்து வருவதாகவும் சோவியத் அதிபர் கவலை தெரிவித்தார்.

இதேவேளையில் ஐ. நா. பொதுச்செயலாளரின் புதிய சமாதான திட்டத்தை பிரிட்டனும், ஆர்ஜென்டீனாவும் ஏற்றுக்கொள்ளும்எனக்கருதப் படுகிறது

## "இக்பாலின் இலக்கிய பொக்கிஷம் முழு மனித குலத்துக்கும் சொந்தமானது"

மாஸ்கோ, மே. 6

கவிஞர் இக்பால் தினம் இங்கு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது சோவியத் விஞ்ஞானப் பேரவையின் கீழைத்தேயவியல் கழகம் ஒழுங்கு செய்திருந்த இக்பால் தின வைபவக் கூட்டத்தில் பாகிஸ்தான் தூதர் ஜனாப் இஃப்திஹார் அலி, இந்திய தூதரகப் பொறுப்பதிகாரி திரு. மாதவன், இந்தியத் தூதரின் துணைவியரான திருமதி அமினா அஹூஜா, பாகிஸ்தான் இந்திய தூதரக அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

பிரபல சோவியத் கீழைத்தேயவியலாளரான பேராசிரியர் யெவ்ஜெனி செலிஷேவ் உரையாற்றுகையில்; ஆண்டு தோறும் இக்பால் தினத்தை சோவியத் அறிஞர்கள் கொண்டாடுகிறார்கள் என்று கூறினார்.

இக்பாலின் படைப்புக்கள் குறித்து ஆராய்ச்சிக் கட்டுரைகள் தொடர்ந்து வெளியாகி வருகின்றன. "முகம்மத் இக்பாலின் படைப்புக்கள்குறித்து ஒரு பார்வை" என்ற மகுடத்தில கட்டுரைத் தொகுதியொன்றும் வெளியிடப்பட்டுள்ளது. மாஸ்கோ, தாஜிக், உஸ்பெக் அறிஞர்களும் அன்னமாரி ஸ்சிமெல் என்ற மேற்கு ஜெர்மன் அறிஞரும் இக்கட்டுரைகளை எழுதியுள்ளனர்" என்று செலிஷேவ் கூறினார்

"இக்பால் ஒரு சிந்தனையாளர்; ஒரு மனிதாபிமானி அவரது இலக்கிய பொக்கிஷம் மனிதகுலம் முழுவதற்குமே சொந்தமானது. சோவியத் அக்டோபர் புரட்சியை கிழக்குலகில் முதன்முதலில் வரவேற்று தமது படைப்புக்களில் குறிப்பிட்டவரும் இக்பால் தான்" என்று அவர் சுட்டிக் காட்டினார்.

கவிஞர் இக்பாலின் இலக்கிய பாரம்பரியத்தையும் மனிதநேய தத்துவத்தையும் நன்கு ஊடுருவும் வகையில் சோவியத் அறிஞர்கள் மேற்கொண்டுள்ள பெரும் பணியினால் தாம் பெரிதும் கவரப்பட்டுள்ளதாகப் பாகிஸ்தான் தூதர் தமதுரையில் குறிப்பிட்டார். இக்பால் குறித்த உலக ஆய்வுக்கு பங்களித்து வருவதற்காக கீழைத்தேயவியல் ஆய்வுக் கழகத்துக்கு அவர் நன்றி தெரிவித்தார்.

கிழக்கத்திய மக்களுக்கு இக்பாலின் படைப்புகள் கொண்டுள்ள முக்கியத்துவத்தை தொகுத்துக் கூறிய இந்திய தூதரின் மனைவி திருமதி அஹூஜா, சோவியத் அறிஞர்களது அண்மைக்கால ஆய்வுகள், கவிஞராகவும் சிந்தனையாளராகவுமுள்ள இக்பாலின் திறமைகளை வெளிக்கொணர உதவுகின்றன என்று சுட்டிக் காட்டினார்.

உருது மொழியில் இக்பாலின்கவிதைகளைதிருமதிஅமினா அஹூவும். திருமதி மாதவனும் சிலசோவியத் பிரதிநிதிகளும் பாடினர்.

## யுத்தத்தைநிறுத்த கோரிக்கை

லண்டன், மே. 6

போக்லண்ட் தீவுகள்பிரச்னை தொடர்பாக ஆர்ஜென்டீனாவுக்கும், பிரிட்டனுக்குமிடையே இடம்பெற்றுவரும் யுத்தத்தை உடனடியாக நிறுத்தும்படி பிரிட்டனின் தொழிற்கட்சியைச் சேர்ந்த 73 பாராளுமன்ற உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (வெ)

## சோவியத் ராணுவ இரகசியங்கள்

வாஷிங்டன், மே. 6

சோவியத்ரஷ்யாவின் ராணுவத்தள இரகசியங்கள் பற்றிய தகவல்கள் அமெரிக்க செனட் சபை உறுப்பினர்களுக்கு நேற்று தெரிவிக்கப்பட்டது. (க-இ)

# அவதார புருஷர்களை மக்கள் ஏன்பின்பற்றுகிறார்கள் இல்லை

## சுவாமி சித்ருபானந்தா விளக்கம்

(புலோலி)

''கடவுள் நம்பிக்கை தான் மனிதனை உய்வடையச் செய்யும். இதனைக் கருத்திற் கொண்டு எமது எதிர்கால சந்ததியினர் மத்தியில் கடவுள் நம்பிக்கையை ஏற்படுத்தக் கூடிய வழிவகைகள் மேற்கொள்ளப்படவேண்டும்''

இவ்வாறு பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரக் கல்லூரி விடுதி மாணவிகள் மத்தியில் உரையாற்றிய சுவாமி சித்ருபானந்தா குறிப்பிட்டார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது;

''புத்தர், யேசு, ஸ்ரீ இராமகிருஷ்ணர் போன்ற அவதார புருஷர்கள் தோன்றி மக்களுக்கு நல்வழி காட்டினார்கள். ஆனால் மக்களில் சிலரே இந்த அவதார புருஷர்களைப் பின்பற்றினார்கள். ஏன் மக்கள் அவர்களைப் பின்பற்றவில்லை என்பதைப் பார்க்கும்போது அம்மகான்களின் வழிகளில்கவர்ச்சி இருக்கவில்லை என்பது தெரிகிறது.

''உண்மைக்குப் பெரும்பாலும் கவர்ச்சி கிடையாது. பொய்க்குத்தான் கவர்ச்சியுண்டு பொய்க்குத்தான்கவர்ச்சியுண்டென்பதை துறவிஒருவர் தனது சீடருக்கு ஒரு செய்கைமூலம் விளக்கினார்.

''மனிதன் ஒருவன் ஒரு இடத்தில் பன்றிபோல் கத்துவதாக விளம்பரப்படுத்தினான் அங்கு பெருங்கூட்டம் கூடியிருந்தது. ஆனால் அதன் மறுபுறத்தில் ஒருவன் பன்றியைக் கத்தச் செய்துகொண்டிருந்தான். ஆனால் அங்கு எவரேனும் செல்லவில்லை. இதன் மூலம் அத்துறவி நித்தியமான உண்மைப் பொருளுக்கு கவர்சியில்லை என்பதை விளக்கிக் காட்டினார்.

''புத்தர் யேசு, இராமக்கிருஷ்ணர் ஆகிய மகான்களிடம் சிறப்பியல்புகள் காணப்பட்டன. ஆனால் அதை மக்கள் உணரவில்லை. இம்மகான்களின் சிறப்பியல்புகளையும் உண்மையையும் மக்களுக்கு விளங்கச் செய்து அவர்களை உயர்வடையச் செய்ய வேண்டும்.

# கள்ளச் சாராயம் விற்ற பெண்ணுக்குரூ.100 அபராதம்

(மட்டுவில்)

அனுமதியின்றி சாராயம் விற்ற ஒரு பெண்ணுக்கு சாவகச்சேரி மாவட்ட நீதிபதி நூறு ரூபா அபராதம் விதித்தார். அபராதம் செலுத்தத் தவறினால் ஒரு மாத கடூழியச் சிறைத்தண்டனை அனுபவிக்க வேண்டும் என்றும் தமது தீர்ப்பினை அவர் தெரிவித்தார்.

சாவகச்சேரி பொலிஸ் பகுதியைச் சேர்ந்த கந்தையாபெண் அழகம்மா என்பவரே இப்படி அனுமதியின்றி சாராயம்விற்றவராகும். சாவகச்சேரி கலால் பகுதியினர் இவர்மீது வழக்குத் தாக்கல் செய்திருந்தனர்.

சாவகச்சேரி மாவட்ட நீதிபதி ஜனாப்.எம்.எச்.காரியப்பர் முன்னிலையில் இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. விசாரணையின் போது எதிரி குற்றத்தை ஒப்புக்கொண்டார். நீதிபதி எதிரிக்கு ரூபா 100 அபராதம் விதித்துத் தீர்ப்பளித்தார்.

[இ]

# வாழ்வில் விரக்தி: வாலிபர் தற்கொலை

[நல்லூர்]

வாழ்வில் விரக்தியுற்ற வாலிபர் நஞ்சிடம் தஞ்சம் புகுந்த பரிதாப சம்பவம் கட்டுப்பிராயில் நிகழ்ந்துள்ளது.

எஸ். நவரத்தினம் (வயது 28) என்ற வாலிபரே இவ்வாறு மரணமானவராவார்.

பல வருடங்களாக வேலை இல்லாது இருந்துவந்த இவர், சில தினங்களாக மன வேதனையுடன் காணப்பட்டார் என்றும்; சம்பவதினம் வீட்டில் ஏற்பட்ட சிறு தகராறைத் தொடர்ந்து இவர் நஞ்சருந்தியதாகவும் விசாரணையிலிருந்து தெரியவந்துள்ளது.

திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. எஸ். எஸ். பிரான்சிஸ் தற்கொலை என்று தீர்ப்பளித்துள்ளார்.


## வைத்திலிங்கம்ஸ்

உறுதியானதும்
நீடித்து உழைப்பதும்
தன்னிகரற்றதுமான
'றிவர்' பிரான்ட்
கல்வனைஸ்ட் இரும்புத் தகடுகள்

பிரதான விநியோகஸ்தர்களும்
இரும்புப் பொருட்கள் விற்பனையாளர்களும்

என். வைத்திலிங்கம்
நிறுவனத்தார்
450, பழைய சோனக தெரு,
கொழும்பு-12.
தொலைபேசி: 33143-4

கிளை:
138, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 530


# தலைவராக தெரிவு

[மன்னார்]

மன்னார் பட்டினம் கிழக்கு கிராமோதய சபைத் தலைவராக மன்னார்-அல் அஸ்ஹார் மகாவித்தியாலயத்தில் ஆசிரியராகக் கடமையாற்றும் ஜனாப் எம். இக்பால் ஒரே ஒரு அதிகப்படியான வாக்குகளைப் பெற்று தெரிவு செய்யப்பட்டார்.

மன்னார் பட்டினம் கிழக்கு விசேட சேவை அலுவலர் ஜனாப் ஏ. அபுல் குதா தலைமையில் நடைபெற்ற இக் கிராமோதய சபைத் தலைவர் தெரிவில் ஜனாப் இக்பால் பதினொருவாக்குகளும் இவரை எதிர்த்துப்போட்டியிட்ட திரு. ஏ பி. பிகிருடோ பத்து வாக்குகளையும் பெற்றனர்.

சிறந்த சமூகத் தொண்டரும், மன்னார் புனித சவேரியார் கல்லூரி, பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலை ஆகியவற்றின் பழைய மாணவரான ஜனாப் இக்பால் மன்னார் இளம் கைப்பணியாளர் சங்கம், மன்னார் நலன் நோக்குச் சங்கம் மற்றும் மன்னார் அல் அஸ்ஹார் மகா வித்தியாலயம், மன்னார் புனித சவேரியார் கல்லூரி ஆகிய பாடசாலைகளின் அபிவிருத்திச் சங்கங்களின் உறுப்பினருமாவார்.

# புத்தஜயந்தி

(கரவெட்டி)

பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஸ்ண சாரதா சேவாச்சிரமத்தில் இன்றும் நாளை மறுதினமும் புத்த ஜயந்தி கொண்டாடப்படவுள்ளது.

இன்று விசேட பூசைகளும், ஆராதனைகளும் நடைபெறவுள்ளன. நாளை மறுதினம் விசேட நிகழ்ச்சியாக ''புத்தரின் துறவும் வாழ்வும்'' என்னும் பொருள்பற்றி சுவாமி சித்ருபானந்தா கருத்துரை வழங்குவார். இதற்கான ஒழுங்குகளை சேவாச்சிரம பொதுச் செயலாளர் திரு. ஏ. என். எஸ். திருச்செல்வம் மேற்கொண்டு வருகிறார். (இ)

# ஆசிரியர் மாநாடு

[அரியாலை]

ஓய்வு நாள் வேதாகமப் பாடசாலைகளின் ஆசிரியர்களுக்கான மாநாடு இன்றும், நாளையும் யாழ். ரிம்மர் மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது. இந்த மநாட்டில் அருட்திரு. கெனத் பெர்னாண்டோ அடிகளார், அருட்திரு. டி. சி. இரத்தினசிங்கம் அடிகளார், அருட்திரு ஐசக் செல்வரத்தின அடிகளார், திரு. ஜெபநேசன் ஆகியோர் அருளுரை நிகழ்த்துவார்கள்.

# பாலஸ்தாபன கும்பாபிஷேகம்

[புலோலி]

பருத்தித்துறை புலோலி மேற்கு ஆத்தியடிப் பிள்ளையார் ஆலய பாலஸ்தாபன கும்பாபிஷேகம் கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது. நயினை சிவஸ்ரீ ச. மகேஸ்வரக் குருக்கள் பாலஸ்தாபனத்தை நடாத்தினார்.

ஒரே கிராமத்தைச் சேர்ந்தவர்களை

# ஒற்றுமையாக வாழ நீதிபதி புத்திமதி

[மட்டுவில்]

சமாதானமும் ஒற்றுமையும் ஒவ்வொருவருக்கும் அவசியம். இன்று சாட்சியாக உள்ள உங்களுக்கு எதிரிக்கூட்டில் நிற்பவர்கள் எதிரிகளாக இருக்கலாம். நாளை அந்த எதிரிகளிடமிருந்து உங்களுக்கு உதவிகள் தேவைப்படலாம். ஆகவே ஒரே கிராமத்தைச் சேர்ந்த நீங்கள் சமாதானமாகச் செல்வதே சிறந்தது. நான் எதிரிகளை எச்சரித்து ஏதாவது நஷ்டஈடு வாங்கித்தருகிறேன். நீங்கள் ஒற்றுமையாகச் செல்லுங்கள்.

இவ்வாறு சாவகச்சேரி மாவட்ட நீதிபதி ஜனாப் எம். எச். காரியப்பர் ஒரு வழக்கில் இருபகுதியையும் சாமாதனம் செய்து அனுப்பினார். எதிரிகளையும் எச்சரிக்கை செய்த நீதிபதி முறைப்பாடு காரர்களுக்கு ரூபா 500 நஷ்ட ஈடாக வழங்கும்படியும்,அதைஅடுத்த தவணை வரும்போது கொண்டு வரும்படியும் உத்தரவிட்டார்.

எழுதுமட்டுவாளைச் சேர்ந்த சு. யோகேஸ்வரன், செ. சுப்பிரமணியம், சு. அழகரத்தினம், க. முருகேசு ஆகிய நால்வரும் அதே ஊரைச் சேர்ந்த க. கந்தசாமி க. கமலம்மா செல்லமுத்து ஆகிய மூவரையும் அவர்களுடைய வீட்டினுள் 1979–ம் ஆண்டு அக்டோபர் 27–ம் திகதி அத்துமீறிப் புகுந்து தாக்கி காயம் விளைவித்ததாக பளைப் பொலிசாரால் குற்றம் சாட்டப்பட்டிருந்தது. இந்த வழக்கை சாவகச்சேரி மாவட்ட நீதிபதி ஜனாப் எம். எச். காரியப்பர் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

விசாரணையின் போது இரு பகுதியையும் சமாதானம் செய்து வைத்தார்.

# ''கிராம முன்னேற்றத்துக்கு பாடுபடுவேன்''

(மன்னார்]

''பேசாலை கிராமத்தில் இதுவரை இடம்பெற்ற தெரிவுகளில் முதல் தடவையாக ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டவன்நான் என்பதில்பெருமையடைகிறேன். என்னாலான சகல உதவிகளையும் பேசாலைக் கிராமத்திற்குச் செய்வேன். எனது சேவை சிறக்க சகலரும் எனக்கு பூரண ஒத்துழைப்பு தரவேண்டும்.''

இவ்வாறு பேசாலை விசேட சேவை அலுவலர் திரு. ஜே. ஏ. தோமஸ் மிராண்டா தலைமையில் பேசாலை கிராம முன்னேற்றச் சங்க மண்டபத்தில் நடைபெற்ற கிராமோதய சபைத் தலைவர் தெரிவையடுத்து பேசாலை கிராமோதய சபைத் தலைவராகத் தெரிவு செய்யப்பட்ட திரு ஏ. அல்பிரட் குலாஸ் தெரிவித்தார்.

இவ்வைபவத்தில் மன்னார் உதவி அரசாங்க அதிபர் திரு. வி. வைரமுத்து, பேசாலைக் கிராம சேவை அலுவலர் திரு. ஜே.ஜே. மிராண்டா,பேசாலை தபால் நிலைய பிரதம தபாலதிபர் ஆகியோர் உட்பட பலர் கலந்து கொண்டனர். இவ்வைபவத்தையடுத்து பேசாலை கிராமோதய சபை தலைவராகத் தெரிவு செய்யப்பட்ட திரு அல்பிரட் குலாஸ்பேசாலை கிராம முன்னேற்றச்சங்க மண்டபத்திலிருந்து பேசாலை புனித வெற்றி நாயகி ஆலயத்திற்கு ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டார்.

# முடிவு சமநிலை

[வேலணை]

தீவுப்பகுதி மக்கள் வங்கித் தெரிவுக் கோஷ்டிக்கும், காங்கேசன்துறை மக்கள் வங்கிக்குமிடையே நடைபெற்ற சிநேகபூர்வமான மென்பந்து கிரிக்கெட் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது. தீவுப்பகுதி மக்கள் வங்கித் தெரிவுக் கோஷ்டிக்கு புங்குடுதீவு மக்கள் வங்கியைச் சேர்ந்த திரு. த. உதயகுமாரனும். காங்கேசன்துறைக் கோஷ்டிக்கு திரு. பாலேந்திராவும் தலைமைதாங்கினர்

[சு.


மிளகாய் இலைச் சுருளைத் தடுத்து
அதிக விளைச்சலைப் பெறுங்கள்

BASF
குமுலுஸ் எஸ்

நீரில் கரையக் கூடிய
80% கெந்தகம்

- நீரில் கலந்தவுடன் பால் நிறமாக மாறுகிறது.
- மிளகாய் இலைச் சுருளைத் தோற்றுவிக்கும் மைட்களை அழித்தொழிக்கிறது.
- மரக்கறி பயிர் வகைகளில் 'காளான்' தாக்கத்தைக் கட்டுப்படுத்துகிறது.

இது ஒரு
''மேற்கு ஜெர்மனி 'BASF''
தயாரிப்பாகும்.




குமுலுஸ் எஸ்
500 கிராம் ரூபா 12/50

கிடைக்குமிடம்: சகல விவசாய இரசாயனப் பொருள் விற்பனையாளரிடமும்

மக்வுட்ஸ் ஸ்தாபனம்
297, யூனியன் பிளேஸ், கொழும்பு 2.
தொலைபேசி: 32941-5

Metropolitan

## 77 கலவரத்தின்போது

# எனது உறவினர் நண்பர்களைக்கூட கைதுசெய்ய நடவடிக்கை எடுத்தேன்

### பாராளுமன்றத்தில் ஈ. எல். கூற்று

கொழும்பு)

1977ம் ஆண்டு இனக்கலவரத்தின்போது கண்டிப் பகுதியில் அமைதியையும் ஒழுங்கையும் நிலைநாட்டும் பொருட்டு எனது ஆதரவாளர்கள், உறவினர்கள், நண்பர்கள் உட்படப் பலரைக் கைது செய்து தடுப்புக்காவலில் வைக்க நடவடிக்கை எடுத்தேன்.

இவ்வாறு சுகாதார அமைச்சர் திரு. ஈ. எல். சேனநாயக்கா நேற்றுமுன்தினம் பாராளுமன்றத்தில் உரையாற்றுகையில் கூறினார்.

சட்டவிலக்கு உரிமைச் சட்டமூலத்தின் 2-வது வாசிப்பின் மீதான விவாதத்தில் உரையாற்றிய திரு சேனநாயக்கா மேறும் கூறியதாவது:

என்னைப் பாதுகாக்கவே இச் சட்டமூலம் கொண்டுவரப் பட்டதாகக் கூறப்படுகிறது. அது தவறு.

77-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 18-ம் திகதி அமைச்சரவைக் கூட்டம். அன்று பிரதமராக இருந்த திரு. ஜே. ஆர் ஜெயவர்த்தன தலைமையில் அமைச்சரவைக் கூட்டம் நடைபெற்ற வேளையில் அனுராதபுரத்திலும் கண்டியிலும் பாரதூரமான சம்பவங்கள் நடைபெற்ற உள்ளதாக இரகசியப் பொலிசாரிடமிருந்து கிடைத்த தகவலைஅடுத்துநான் கண்டிக்கும் கலாசார அமைச்சர் ஈ. எல். பி. ஹுருள்ளே அனுராதபுரத்திற்கும் அனுப்பப்பட்டோம்.

கண்டியிலும் அனுராதபுரத்திலும் ஏற்பட இருந்த நிலைமையைச் சமாளிக்கவே நாம் பிரதமரின் பணிப்பின்பேரில் அங்கு சென்றோம்.

ஹெலிகொப்டரில் கண்டிக்குச் சென்ற நான் காலநிலை சரியில்லாத காரணத்தால் குருநாகலில் இறங்கி கண்டிக்குக் காரில் விரைந்தேன்,

பிரதமர் எனக்கு தந்த அதிகாரத்தின் மீது நான் நடவடிக்கைகளை மேற்கொண்ட போதிலும் அப்போது கண்டி பொலிஸ் அதிபராக இருந்த சண்முகம் எனதுஉத்தரவுகளை நடைமுறைப்படுத்தவில்லை. அதே வேளையில் ஏனைய இராணுவ பொலிஸ் அதிகாரிகள் எனது உத்தரவுகளைஏற்று நடந்தனர்.

கண்டியில் அப்போது நடைபெற்ற தாக்குதல் சம்பவங்கள் தொடர்பாக எனக்கு எதிராக 13 வழக்குசள் தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றன. அவற்றில் ஒன்றுன டாக்டர் ராஜேந்திராவின் வழக்கில் நான் விடுதலை செய்யப்பட்டேன். அதேகுற்றச்சாட்டின் மீதே ஏனைய வழக்குகளும் தாக்கல் செய்யப்பட்டுள்ளன என்றும் அந்த வழக்குகளிலும் இது போன்ற தீர்ப்பே வழங்கப்படும் என எதிர்பார்க்கப்படுவதால் அவ்வழக்குகளுக்கும் சென்று நேரத்தை ஏன் வீணுக்கவேண்டும் உன நான் ஜனதிபதியிடம் தெரிவித்தேன். அதனுல்தான்போலும் ஜனுதிபதி இச்சட்டமூலத்தைக் கொண்டுவர ஏற்பாடு செய்தார்.

## இன்று

(யாழ்ப்பாணம்)

சுவாமி ஸ்ரீ. சிவபாலயோகிகள் தலைமையில் இன்றுகோண்டாவில் ஸ்ரீ காளி கோவிலில் சண்டிஹோம மகா பூர்ணுகுதி நடைபெறவிருக்கிறது.

காலை ஆறுமணிக்கு சண்டிஹோமத்துடன் ஆரம்பமாகும். மேற்படி கிரியை வைபவத்தையடுத்து அபிஷேகம், பூசை ஆகியன நடைபெறவிருக்கின்றன.

மாலை 4 மணிக்கு மேற்படி ஆவயத்தில் விசேடபூசையும் அதனையடுத்து சுவாமிகளின் தரிசனமும், தியான தீட்சையும் வழங்கப்படும்.

### மாலினி மரண விசாரணை:

# "சந்தேகநபரை நீதி நன்மைக்காக றிமாண்டில்வைக்கவேண்டும்"

(1ம் பக்கத் தொடர்ச்சி

12-4-82ல் தான் திருமதி மகேந்திரன் படுத்திருந்த பக்கத்து அறைக்குள் படுத்திருந்ததாகவும், 11-30 மணிபோல் மற்றவர்கள் நித்திரைகொண்டபின் திருமதி மகேந்திரன் தனது அறைக்கு வந்து ஏன் ஒருமாதகாலமாக தன்னைசந்திக்கவரவில்லை என்றுதன்னிடம் கேட்டு கதைத்துவாக்குவாதப் பட்டதாகவும் அன்று திருமதி மகேந்திரனுக்கு சுகயீனம் வந்தது அண்மையாக இருந்தபடியால் உறவு கொள்ளவில்லை என்றும் கூறி அதன் பின்பு 20 நிமிடத்தில் திருமதி மகேந்திரன் சென்றுவிட்டார் என்றும் கூறினுர் மன்று இந்த வீட்டை அடுத்தநாள் பார்வையிட்டபோது சிவகுமாரன் படுத்திருந்த அறைக்குப் பக்கத்து அறையில் சாமி அறையாக இருந்ததையும் அதற்குள் ஏராளமான பொருட்கள் வைக்கப்பட்டிருந்ததையும் அவதானித்தது. அந்தஅறைக்குள் ஒரு கட்டிலும் தென்படவில்லை. அந்த அறை ஒரு பொருட்கள் வைக்கும் அறையாகத்தான் தென்பட்டது. இந்த அறைக்குள் சிவகுமாரரின் நீளக் காற்சட்டை ஒன்றும் காணப்பட்டது மாலினி நடுச்சாலைக்கு அடுத்த பக்கமாக உள்ள அறைக்குள் படுத்திருந்ததாக கூறப்பட்டது. மாலினி அறையை விட்டு வெளியே வருவதானுல்தாயார் படுத்திருந்த அறைக்குள்ளால் தான் வெளியே போகலாம். தாயார் மாலினியினுடைய பிள்ளையுடன் மாலினியின் அறைக்குப் பக்கத்து அறைக்குள் படுத்து இருந்தார். வழமையாக தாயாருடையஅறைக்கதவே பூட்டப்பட்டிருக்கும். என்றும் அவதானிக்கப்பட்டது ஆகவே மாலினி படுத்திருந்த அறையில் இருந்த சிவகுமார் படுத்திருந்த அறைக்கு வரக் கூடியசூழ்நிலைகள் ஒன்றும் தென்படவில்லை. சிவகுமார் கூறியபடி பக்கத்து அறையில் மாலினி உறங்கவில்லை. மன்று கிளிநொச்சி விடுதியைப் பார்வையிட்டபோது அன்று இரவு ஒரு பீங்கானில் மட்டும் சாப்பாடு அருந்திக் கழுவாமல் வைக்கப்பட்டிருந்தது, அதற்குப் பக்கத்தில் ஒரு கிளாசும் இருந்தது. அதோடு ஒரு போத்தலில் இருந்த தண்ணீரில் கால்பங்கு தண்ணீர் மட்டும் எடுக்கப்பட்டிருந்தது, ஆகவே சிவகுமார் தானும், மாலினியும் 12-30 மணிக்கு இருவருமாக சாப்பிட்டதாகக் கூறியதற்கு ஒரு அறிகுறிகளும் இல்லை. சட்ட வைத்திய அதிகாரியின் அறிக்கையின்படி மாலினியின் சிறு குடலில் ஜீரணித்த உணவு சிறு குடலில் திரவமாக தென்படவில்லை. அன்று மாலினி உணவு அருந்தினுர் என்பதற்கு சந்தேகம் ஏட்பட்டுள்ளது. சிவகுமார் 2-30 மணி போல் தன்னைக் கூப்பிடும் சத்தம் கேட்டு மாலினியின் அறைக்குள் சென்ற பொழுது நஞ்சு வாடை வீசியதாகக் கூறியுள்ளார். சிவகுமார் கார் வைத்திருந்தும் மாலினியை உடனேயே ஆஸ்பத்திரிக்கு கொண்டு செல்லவில்லை அயலில்இருப்பவர்களை அழைக்கவும் இல்லை.

சிவகுமார் கார்வைத்திருந்தும்கூட மாலினியை உடனேயே ஆஸ்பத்திரிக்கு கொண்டு செல்லவில்லை. அயலில் இருப்பவர்களை அழைக்கவுமில்லை. ஒருவர் நஞ்சருந்தியதாகத் தென்பட்டால் உடனே ஆஸ்பத்திரிக்கு எடுத்துச்செல்வது ஒரு நியாயமான மனிதனின் செயல் ஆகும். சிவகுமார் கடைசிமுறையாக மாலினியை என்ன குடித்தீர் என்று கேட்ட போது மாலினி முன் யன்னலிலிருந்த பிளாஸ்ரிக் போத்தலில் உள்ள 'தமரோனை' எடுத்துக் குடித்ததாகக் கூறினுர் என்று கூறியுள்ளார். அவர் உடனேயே போத்தலை எடுத்துப்பார்த்தபொழுது போத்தல் மூடி ஏறக்குறைய பூட்டப்பட்டதாக இருந்தது என்று சிவகுமார் கூறியுள்ளார்.

### "ஒருவர் நஞ்சருந்திஞல்

## போத்தல் மூடியைகவனமாக மூடி வைத்திருக்க முடியாது"

ஒருவர் நஞ்சு அருந்திஞல் அந்த போத்தல் மூடியைக் கவனமாக மூடிவைத்திருக்க முடியாது. அத்துடன் மற்றச் சாட்சியங்களின் சாட்சியத்தின்படி இந்த 'தமரோன்' போத்தல் சிவகுமாரின் யன்னலில் இருந்ததாகக் கூறப்பட்டுள்ளது. இதைவிட மாலினியின் அறையில் இருந்த வாணிஸ் பூசப்பட்ட மேசை மேல் பக்கத்தில் கீழ்ப்புறமாக ஒரு சிறு துண்டு உடைந்து இருந்ததையும், அத்துண்டில் ஒரு நூல் இருந்ததையும் அவதானித்து அந்த நூலும் சிவகுமாரன் அன்று அணிந்திருந்த சாரமும் இரசாயனப் பகுப்பாளருக்கு அனுப்பப்பட்டது. மேசையில் இருந்த 'அலாம்' மணிக்கூடு வழமையாக பாவிக்கப்படவில்லை என்று மகேந்திரன் கூறுவதிலிருந்து அம் மணிக்கூட்டை கைவிரல் அடையாளப் பகுப்பாளருக்கு பரிசோதனைக்காக அனுப்பும்படி உத்தரவிடப்பட்டது. சிவகுமார் மாலினியை அரைவாசி மயங்கிய நிலையில் டாக்டர் தணிகாசலத்திடம் எடுத்துச் சென்று இருந்தார்.

### கிருமிநாசினி அருந்தியதாக

மாலினி 'தமரோன்' அருந்தியதாகவோ அல்லது கிருமிநாசினி அருந்தியதாகவோ வைத்தியரிடம் உடன் கூறவில்லை. அன்று இரவு 2 மணிபோல் தான் மாலினியின் அறையில் படுத்திருந்ததாகவும், வழமையாக நான் அந்த அறையில் படுத்திருக்கும் பொழுது ஒருவித விளக்கும் போடுவதில்லை என்றும் அன்று பச்சை விளக்கோ, அல்லது மற்ற விளக்கோ எரிவதில்லை என்றும் கூறியுள்ளார் ஆனுல் சகாயராசாவின் சாட்சியத்தின்படி அன்று இரவு 2 மணிபோல் தான் போகும் போது மாலினியின் அறையில் பச்சை விளக்கு எரிந்துகொண்டிருந்ததாக கூறியுள்ளார், ஆகவே சிவகுமார் அன்று இரவு மாலினியின் அறையில் படுத்திருந்தார் என்பதற்கு நியாயமான சந்தேகம் ஏற்பட்டுள்ளது. இதைவிட சட்ட வைத்திய அதிகாரியின் அறிக்கையின்படி அவரின் கையில் உட்புறத்தில் நகத்தால் ஏற்பட்ட ஒரு காயம் இருக்கின்றது. சிவகுமார் படுத்திருந்த அறையில் இரத்தக் கறைகளும் காணப்பட்டன. அவற்றை இரசாயன பகுப்பாளருக்கு பரிசீலனை செய்யும்படி அனுப்பப்பட்டுள்ளது. அத்தோடு சிவகுமார் படுத்து இருந்த அறையில் இருந்த படுக்கைவிரிப்பு மர்மமான முறையில் காணுமல் போய் உள்ளது. இவைகளை விட மன்றில் கொடுக்கப்பட்ட சிவகுமாரின் சாட்சியத்திற்கும் மற்றய சாட்சிகளின் சாட்சியத்திற்கும் முரண்பாடுகள் இருக்கின்றன. ஆகவே பொலிசாரால் சிவகுமார் மேல் குற்றம் சுமத்தப்படவில்லை என்ருலும் அவருக்கு எதிராக அவர் மேல் நியாயமான சந்தேகம் உண்டு. எனவே பொலிசார் மேலும் இம் மரணம் சம்பந்தமாக விசாரணை செயயப்பட வேண்டும். விசாரணை முடியும் வரை சந்தேகநபரை நீதி நன்மைக்காக விளக்கமறியலில் வைக்கவேண்டுமென்று மன்று கருதுகின்றது.

[8ம் பக்கம் பார்க்க]

## அண்ணுமலை இசைத் தமிழ் மன்ற 24-வது ஆண்டு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் அண்ணுமலை இசைத் தமிழ் மன்றத்தின் 24வது ஆண்டு நிறைவு விழா இன்று மாலை இசை அரசு திரு. அ. சோமசுந்தரம் தலைமையில் நல்லை ஆதீனத்தில் ஆரம்பமாகவுள்ளது. இவ்விழாவின் இன்றைய நிகழ்ச்சிகள்:

மாலை 5-00 மணி மங்கள இசை கே. ரி. எஸ். சகோதரர்கள்.

மாலை 6-00 மணி செல்வன் எஸ். தில்லைமணி பண்ணிசை.

மாலை7-00மணிஆசியுரைஸ்ரீல ஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள், வரவேற்புரை; சங்கீத பூஷணம் திரு. ஏ. எஸ். இராமநாதன்[அ. இ. ம. தலைவர்] 24ம் ஆண்டு தமிழிசை விழாத் தலைவர் சங்கீத பூஷணம் திரு. அ. சோமசுந்தரம் அவர்களுக்கு ''இசையரசு'' என்ற பட்டம் வழங்கிப் பொன்னுடை போர்த்துக் கௌரவித்தல்.

பராட்டுரை: இசையரசு திரு. எஸ். இரத்தினசபாபதி, சங்கீத பூஷணம் திரு. எஸ். கணபதிப்பிள்ளை, சங்கீத வித்தியாதரிசி வித்துவான் தரு. சி. ஆறுமுகம், சமூகத்தொண்டன் திரு. ஆ. துரைராசசிங்கம் [யா. மா. உ.] இசை விழாத் தலைமையுரை இசையரசு திரு. அ. சோமசுந்தரம்,

மாலை 7-45 9-00 திரு. ஐ வேலாயுதபிள்ளை - பாட்டு திருமதி ஞானும்பிகை பத்மசிகாமணி வயலின், திரு. அ. இரகுநாதன் - மிருதங்கம்.

கௌரவ விருந்தினர்களாக திரு. செ. சபாபதிப்பிள்ளை, நல்லூர் உதவி அரசாங்க அதிபர் திரு. ஆர். ஜே. குணரத்தினம் ஆகியோர் கலந்துகொள்வர்.

## மோசடி செய்த பணத்தை தவணையில் செலுத்துவார்

[மட்டுவில்]

பனம் பொருள் உர்பத்தி கூட்டுறவு சங்கமொன்றிலிருந்து இருபதிணுயிரம் ரூபாவை மோசடி செய்ததாகக் கூறப்படும் சங்கக்காசாள்ரை ஆயிரம் ரூபாவீதம் தவணை முறையில் மோசடி பணத்தைச் செலுத்தும்படி சாவகச்சேரி மாவட்ட நீதிபதி ஜனுப் எம். எச். காரியப்பர் உத்தரவிட்டுள்ளார்.

கொடிகாமத்திலுள்ள பனம் பொருள் உற்பத்தி கூட்டுறவு சங்கம் ஒன்றில் காசாளராக இருந்த கந்தசாமி என்பவர் சங்கத்தின் பணத்தை வங்கியில் போடுவதாகக்கூறி மோசடி செய்தாராம். யாழ். விசேடகுற்றத்தடுப்பு பொறுப்பதிகாரி சார்ஜன்ட் திரு. ஜி. எஸ். பிள்ளையிடம் இது பற்றிப் புகார் செய்யப்பட்டது. விசாரணையின் போது சந்தேகநபர் தனதுகுற்றத்தை ஒப்புக்கொண்டார். ரூபா 8000 உடனடியாகச் செலுத்தியுள்ளார் மீதி ரூபா 12,000 செலுத்தவேண்டியிருந்தது. சந்தேக நபரை சார்ஜன்ட் திரு. பிள்ளை சாவகச்சேரி மாவட்ட நீதிபதி ஜனுப் எம். எச். காரியப்பர் முன்னிலையில்ஆஜர் செய்தார்.

நீதிபதி இந்த வழக்கைவிசாரணைக்கு எடுத்துக் கொண்ட பொழுது சந்தேக நபர் தனது குற்றத்தை ஒப்புக் கொண்டார். நீதிபதி மீத் தொகை ரூபா 12,000 ஆயிரத்தையும் இருமாதங்களுக்கு ஒருபயணம் 1000 ரூபாவீதம் தவணைமுறையில் செலுத்தும்படி உத்தரவிட்டு, முதல் தவணையாக ஜூன் மாதம் 28ம் திகதி 1000 ரூபாவை செலுத்தும்படி பணித்தார்.

## ஓய்வு பெற்றுர்

[பண்டத்தரிப்பு]

மானிப்பாய் தபால் நிலைய அதிபர் திரு. என். தங்கவடிவேல் பதவியிலிருந்து ஓய்வு பெற்றுள்ளார். தபால் நிலைய ஊழியர்சளாலும் மானிப்பாய் பிரதேச உப தபால் அதிபர்களினுலும் இவருக்கு சிறந்த முறையில் பிரிவு உபசார வைபவம் நடாத்தப்பட்டது.

# இன்றைய பலன்

சித்திரை மாதம் 24ம் திகதி
வெள்ளிக்கிழமை
(7—5—82)

மேடம்: உள்ளத்தில் உவகைகள் துள்ளும். குடும்பம் இன்றுகலைக்கோயிலாகமாறும். காதலர்கள் வாழ்க்கையில் கனிவான சம்பவங்கள் இடம் பெறும். கலகலப்பான தினம்.

இடபம்: நண்பர்களுடன் கருத்து வேற்றுமை உருவாகும் பெரிய இடத்துச் சிநேகிதம் இன்று ஏற்படலாம். புதுவழிகள் மூலம் பணம் கிடைக்கும். கவனம் வேண்டும்.

மிதுனம்: புதிய பாதைக்குரிய வழிகள் இன்று திறக்கப்படலாம். புத்திரர்களால் சுகமும் உண்டு. இதயத்தில் இன்பமும் பொங்கும். இல்லத்தில் இனிமை தழுவும்.

கடகம்: தொழில் துறையில் புதிய உத்வேகம் காணப்படும் எந்த நிலைமையையும் கட்டுப்படுத்துவதில் தனிப்புகழ் அடைவீர்கள். இன்று நல்ல சிறப்பான தினம்.

சிங்கம்: உண்மைவழிநின்று உயர்வடைவீர்கள். மேலதிகாரிகளின் நம்பிக்கை உங்கள் மீது பதியும். எதிர்பாராத அதிர்ஷ்ட லாபத்துக்கும் இடமுண்டாம்.

கன்னி: கடன்பட்டார்நெஞ்சம்போல் கலங்கி நிற்பீர்கள். விடயங்கள் அனைத்தும் மூடுபனியாகவே இருக்கும். வணிகர்களாயின் முதலீட்டைக் கட்டுப்படுத்திக் கொள்ளவும்.

துலாம்: குருடப் பார்வை உங்களை வட்டமிடும். பிறரின் தலையீடு உங்களுக்கு வேதனையைத் தேடித்தரலாம். மோசடி ஒன்றில் உங்களை மாட்டி வைப்பார்கள்.

விருச்சிகம்; பேச்சு வன்மையால் பிறருடைய நன்மதிப்பைப் பெறுவீர்கள். கல்வித் துறைகளிலும் திருப்திகரமான முன்னேற்றமும் உண்டாம்.

தனு: அவசரப் போக்கினால் அலைச்சலைத் தேடித்தரலாம். மனதில் விரக்தி மனப்பான்மையும் தோன்றக்கூடும்.

மகரம்: வசதிகள் பெருகுவதுடன் வரவிலும் திருப்தி ஏற்படும். செல்வாக்குப் படைத்தவர்களின் உதவியும் அதிகமாகக் கிடைக்கலாம். சூசகமான பலனைத் தரலாம்.

கும்பம்: இதயத்தில் மகிழ்ச்சி தோன்றும். உறவு முறைகளில்இறுக்கம்ஏற்படும். புதியவர் ஒருவரின் தொடர்பால் புதிய பாதை தென்படலாம்.

மீனம்: எதிர்பாராத விபத்துக்கள் ஏற்படலாம். ஆயுதங்களுடன் பழகுபவர்கள் இன்று அவதானமாக இருக்கவும். தெய்வ நம்பிக்கை நன்று.

சோதிடக்கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை


மூன்றுவது வாரம்
ஹரன் யாழ்.நகர்
தினசரி 4 காட்சிகள்
ரஜனிகாந்த், மாதவி
தேங்காய் சீனிவாசன்
தில்லுமுல்லு

Regal Jaffna
Daily 10-30, 2-15, 4-30, 7-00 9-30
CHARLES BRONSON
BREAKOUT

வெலிங்டன்
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
ராஜாவீட்டுப் பிள்ளை
[புதிய பிரதி]

லிடோ தினசரி 4 காட்சிகள்
(யாழ்.நகர்)
WILD GEESE

சாந்தி (யாழ்நகர்) 10–30, 2–30, 6–15, 9–45
இந்தியாவிலிருந்து தருவித்த புதிய பிரதி
சிவாஜி மகாகவி காளிதாஸ்
எதிர்பாருங்கள் கடல்மீன்கள் [கலர்]

வின்ஸர் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
2-வது மாதமாக
ஸ்ரீ பிரியா, சுபாசினி, கமல், ரஜனி, நாகேஷ்
இன்னும் பல நட்சத்திரங்கள் நடித்த
நட்சத்திரம்
(ஈஸ்ட்மன் கலர்)

RAJAH Daily at 10–30, 2–00, 4–30 7–00 and 9–30
(Jaffna) SHIRLY EATON
FUTURE WOMEN
(Strictly for Adults – Scope Color)
கண்டிப்பாக வயதுவந்தவர்களுக்கு

மனோகரா (யாழ்ப்பாணம்)
கார்த்திக்-ராதா-தியாகராஜன்
அலைகள் ஓய்வதில்லை


## போயா தினத்தையொட்டி இன்று சினிமாக்காட்சியில்லை

# பாரதி நூற்றுண்டுவிழா

[அரியாலை]

ஆனைக்கோட்டை திருவள்ளுவர் சேவா மன்றத்தின் ஆதரவில் இன்று பாரதி நூற்றுண்டு விழாவும், பாலர் பாடசாலை வருடாந்த விழாவும் நடைபெறவிருக்கிறது.

திரு. எஸ். அப்பையா தலைமையில் நடைபெறும் பாரதி நூற்றுண்டுவிழாவில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அபிவிருத்தி சபைச் செயலாளரும், யாழ். அரசாங்க அதிபருமான திரு. தேவநேசன் நேசையாவும், சிறப்பு விருந்தினராக யாழ் பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் திரு. நா. சுப்பிரமணியமும் கலந்து கொள்ளவிருக்கின்றனர்.

பாலர் பாடசாலை வருடாந்த விழாவிற்கு திரு. ச. கணபதிப்பிள்ளை தலைமைவகிப்பார். பிரதம விருந்தினராக மானிப்பாய்த்தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் திரு. வி. தர்மலிங்கமும், சிறப்பு விருந்தினராக தொழிலதிபர் திரு. க. கனகராசாவும் கலந்துகொள்ளவிருக்கின்றனர். பாலர் பாடசாலை விழாவில் கும்மி, நடனம், கண்ணன் நடனம், நந்தலாலா, பரத நாட்டியம், பொம்மை நடனம், காவடி நடனம், குறத்தி நடனம் ஆகியன இடம்பெற விருக்கின்றன திரு. வி. தர்மலிங்கம் எம். பி. பரிசுகளை வழங்குவார்கள்.

## இந்திய ஜனாதிபதியின் தமிழ்நாடு விஜயம்

சென்னை, மே. 6

இந்தியஜனாதிபதி திரு. நீலம் சஞ்சீவரெட்டி இம்மாதம் 17ம் திகதி தமிழ்நாட்டிற்குவிஜயம் செய்யவுள்ளார்.

மதுரை மீனாட்சி அம்மனைத் தரிசித்த பின்னர், ராமேஸ்வரம், கன்னியாகுமரி, உதகமண்டலம் ஆகிய பகுதிகளுக்கும் விஜயம் செய்வார் எனறு கூறப்பட்டது. (வெ)

## ஆலய தர்மகர்த்தாசபை

[புங்குடுதீவு]

புங்குடுதீவு பாணாவிடை சிவன் தேவஸ்தான பரிபாலன தர்மகர்த்த சபையின் புதிய நிர்வாகிகள் வருமாறு:-

தலைவர் எஸ். கே. மகேந்திரன், செயலாளர் ந இராசதுரை, பொருளாளர் ம. பாலசிங்கம், உபதலைவர்கள்: இ. பொன்னம்பலம், கா. கந்தசாமி, பொதுப்பிரதிநிதி: அ. ப. பாலசுப்பிரமணியம், உபசெயலாளர்: க. சண்முகசுந்தரம், உப பொருளாளர் செ. நடராசசர்மா எண்பார்வையாளர்: பொ. குமாரசாமி செயற்குழு உறுப்பினர்கள் 15 பேர். [அ]

## ஆண்டுவிழா

[புலோலி]

கெருடாவில் விவேகானந்தா சனசமூக நிலையத்தின் 19வது ஆண்டுவிழாவும் பரிசளிப்பு வைபவமும் நாளை நடைபெறவுள்ளன. இதற்கான நடவடிக்கைகளை சமூக ஐக்கிய சீர் திருத்தச்சங்கமும் சர்வோதைய சமித்தியும் இணைந்து மேற்கொண்டுள்ளன. கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

## பதில் ராஜாங்க அமைச்சர்

[கொழும்பு]

ராஜாங்க அமைச்சர் திரு. ஆனந்ததிஸ்ஸ டி அல்விஸ் வெளிநாடு சென்றுள்ளதால் பதில் ராஜாங்க அமைச்சராக திரு. சந்திரா கருணாரத்ன நேற்று சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார். [வெ]

## "சுகாதார பரிசோதகர்கள்
# பொறுப்பையுணர்ந்து கடமையாற்ற வேண்டும்"

[புங்குடுதீவு]

"சுகாதார பரிசோதகர்களில் அதிகமானோர் பொது மக்களுக்குச் சிறந்த சேவைகளை ஆற்றிவருகிறார்களென்பதை நான் அறிவேன். ஆனால் பொறுப்பற்ற ஒருசில அதிகாரிகள் மனம் போன போக்கில் பணியாற்றி வருவதனால் எல்லா அதிகாரிகளினதும் நற்பெயர்களுக்குமே அவர்கள் அபவாதத்தை தேடித்தந்து விடுகிறார்கள். சமுதாயத்தினரின் சுத்தத்துக்கும் சுகாதார வாழ்வு முறைக்கும், பொறுப்பாக விளங்கும் இந்த அதிகாரிகள் தமது பொறுப்பை யுணர்ந்து தமது கடமைகளை சரிவரச் செய்து வருதல் அவசியமாகும். இத்தகைய அதிகாரிகளைப் பொதுமக்கள் கௌரவமாகவும் கண்ணியமாகவும் நடாத்திவருவார்கள் என்பது உண்மையாகும்."

இவ்வாறு பொதுசுகாதார பரிசோதகர் சங்கக் கூட்டத்தில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு யாழ். சுகாதார சேவை அத்தியட்சகர் வைத்திய கலாநிதி மாணிக்கம் தமது சிறப்புரையாற்றுகையில் கூறினார்.

யாழ். அரசினர் வைத்திய சாலை வெளிநோயாளர் பிரிவு மேல்மாடியில் நடைபெற்ற இக்கூட்டத்துக்குச் சுகாதார பரிசோதகர் திரு. சீனிவாசகம் தலைமை தாங்கினார்.

இளைப்பாறிய சுகாதாரப் பரிசோதகர் திரு.சர்வானந்தா யாழ், கச்சேரி திட்டமிடல் அமைச்சின் அதிகாரி எஸ். சிவதரசன் கணக்காளர் தம்பி ஐயா உட்பட பலர் கூட்டத்தில் உரை நிகழ்த்தினார்கள்.

# இன்றும் நாளையும் நடக்கும் ஆண்டுவிழா - கலைவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ். ஈச்சமோட்டை சனசமூகநிலையத்தின் முதலாவது ஆண்டு நிறைவு விழாவும், கலைவிழாவும் இன்றும், நாளையும் நடைபெறவிருக்கிறது. ஆண்டுவிழாவையொட்டிவிளையாட்டுப்போட்டி. சொற்பொழிவுகள், பட்டிமன்றம், கவியரங்கம், கலைநிகழ்ச்சிகள் பல இடம்பெறவுள்ளன.

இன்று காலை 30மைல் சைக்கிளோட்டப்போட்டி யாழ். உதவிப்பொலிஸ் அத்தியட்சகர் திரு .எஸ்.நவரத்தினராசா ஆரம்பித்துவைப்பார் 15மைல் மரதன் ஓட்டப் போட்டியை முன்னாள் நீதிபதி திரு. யோகநாதன் ஆரமபித்துவைப்பார். பிற்பகல் மென்பந்து, கிரிக்கெட், சுற்றுப் போட்டியினை இறுதி ஆட்டத்தினை யாழ். மாநகரசபை ஆணையாளர் திரு. எஸ். சிவஞானம் ஆரம்பித்துவைப்பார். சிநேகபூர்வ சரபந்தாட்டப்போட்டி ஒன்றும் பிற்பகல்இடம்பெறும்.

இரவு நிகழ்ச்சிகளை, நிலையத் தலைவர் திரு. ஜே. சி. செபஸ்தியாம்பிள்ளை கொடியேற்ற, திரு. வி. சிவலோகநாதன் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைப்பார். பிரதமவிருந்தினராக தமிழர் விடுதலைக் கூட்டணித்தலைவர் திரு. மு. சிவசிதம்பரம் கலந்து கொண்டு உரை நிகழ்த்துவார். சிறப்பு விருந்தின்ராக யாழ். எம்.பி. திரு வெ. யோகேஸ்வரன், மாநகரமுதல்வர் திரு. இராசா விசுவநாதன், யாழ். மாவட்ட அபிவிருத்திசபை உறுப்பினர் திரு. ஜே. எஸ். அழகையா ஆகியோர் கலந்து கொண்டுஉரை யாற்றுவார்கள்.

கவிஞர் புதுவை இரத்தினதுரை தலைமையில் நடைபெறும் கவியரங்கில் கவிஞர்கள் வி. ரி. இளங்கோவன், அரியாலையூர் ஐயாத்துரை, பாஷையூர் தேவதாசன், தேவி பரமலிங்கம், சிவமலர் செல்லத்துரை ஆகியோர் கலந்து கொள்வார்கள். திரு. க. சிவராமலிங்கம் தலைமையில் நடைபெறும் பட்டிமன்றத்தில் திருவாளர்கள் வி. ரி. இளங்கோவன், க. சிவதாசன், பொ. மதிமுகராசா, குமரன், ஜெயராஜ், சபா செந்தில்ராசா ஆகியோர் கலந்துகொண்டு வாதிடுவர். கலைஞர் கே. எஸ். பாலச்சந்திரனின் கதம்ப நிகழ்ச்சியும், நாடகங்களும் நடைபெறும்.

சனிக்கிழமை காலை சிநேகபூர்வமான மென்பந்து கிரிக்கெட் ஆட்டமு பிற்பகல் வினோத உடைப்போட்டி, சங்கீதக் கதிரை, சைக்கிளோட்டம் வழுக்குமரம், கயிறுஇழுத்தல் ஆகிய விளையாட்டுகளும் இடம்பெறும். இரவு நிகழ்ச்சியின்போது எதிர்க்கட்சி முதல்வர் திரு. அ. அமிர்தலிங்கம் பிரதம விருந்தனராகக் கலந்து கொண்டு உரைநிகழ்த்துவார். சிறப்பு விருந்தினராக யாழ். எம் பி. திரு. வெ. யோகேஸ்வரன் உதவிப்பொலிஸ் அத்தியட்சகர் திரு. எஸ். நவரத்தினராசா ஆகியோர் கலந்து கொண்டுஉரையாற்றுவர்.

பரிசில்களை திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் வழங்குவார். நாட்டுக்கூத்துக் கலாநிதி பூந்தான் ம.யோசேப்புக்கு திரு. அ. அமிர்தலிங்கம் எம். பி. பொன்னாடை போர்த்திக் கௌரவிப்பார். வானொலி அறிவிப்பாளர் திரு. கே. எஸ். ராஜா தொகுத்தளிக்கும் 'தேனிசை மழை' 'பாட்டுக்குப்பாட்டு' நிகழ்ச்சிகளும், 'வசந்த கானம்' வில்லிசை நிகழ்ச்சியும், 'இறைவன் இருக்கின்றானா?' சமூக நாடகமும் விழாவில் இடம்பெறவுள்ளன. மாநகரசபை உறுப்பினரும்' நிலையச் செயலாளருமான திரு. ம. சுந்தரலிங்கம் நன்றி கூறுவார்.

## இன்று

(யாழ்ப்பாணம்)

நல்லூர் சங்கிலியன் மன்றத்தில் இன்று நடைபெறும் முழுநிலவு நாள் கலைவிழாவில் கோவை மகேசன் "பாரதியாரின் விடுதலைப் பயணம்" என்ற தலைப்பில் உரையாற்றுவார். (இ)

## பிரிவுபசாரம்

[அரியாலை]

கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் கடமையாற்றி இடமாற்றம் பெற்றுச் சென்ற திருமதி ஏ. நவரத்தினம், திருமதி பி தனபாலசுந்தரம், ஆகியோருக்கு கல்லூரி ஆசிரிய கழகத்தினால் கல்லூரி மண்டபத்தில் பிரிவுபசாரம் அளிக்கப்பட்டது.

ஆசிரிய கழகத்தலைவர் திரு. கா. செ. நடராசா தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் ஆசிரியைகளின் சேவைநலத்தைப் பாராட்டி கல்லூரி உப அதிபர் திருமதி அருள்ராசா, திருமதி ச. கனகரத்தினம், திருமதி எஸ். ரவீந்திரன், திரு. எஸ். கே. திருச்செல்வம் ஆகியோர் பேசினார்கள்.

## தொலைபேசி வசதி

(மட்டுவில்)

மட்டுவில் தெற்கு உபதபால் நிலையத்துற்கு தொலைபேசி வசதிக்கான இணைப்பு வேலைகள் பூர்த்தியாகும் நிலையிலுள்ளன 1979–ம ஆண்டில் சாவகச்சேரி நகரசபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் இப்பொழுதுதான் செயற்படுத்தப்படுகிறது.

## கொக்குவில் மேற்கு சித்திவிநாயகர் (ஐயண்ணர்) கோவில்

யாழ். மாவட்ட நீதிமன்றத்தில் 28-4-82ல் மேற்படி கோவில் வழக்கு விசாரணைக்காக கூட்டப்பட்டது. வழக்காளிகளின் சட்டத்தரணி செல்வி எஸ். அபிமன்ன சிங்கத்திற்கு சுகயீனம் காரணமாக வைத்திய அத்தாட்சிப்பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டதால் 2-8-82-ல் வழக்கு விளக்கத்திற்கு தவணை போடப்பட்டுள்ளது. வழக்காளிகள் திருவாளர்கள் என். அருணசலம் S. பொன்னுத்துரை, S. சிவஞ்ஞானரத்தினம். எதிரிகள் திருவாளர்கள் எஸ். இராசநாயகம், சு. நமசிவாயம், த. நீதிராசா.
3103

## The Ladies Academy

No. 4, 1st Cross Street, Jaffna

புதிய வகுப்புக்கள் மே 9ம் திகதி ஆரம்பம்

- ★ SCIENTIFIC CUTTING and DRESS MAKING
- ★ CAKE ICING and DECORATION
- ★ HAIR STYLES

மேற்கூறிய வகுப்புகளில் சேரவிரும்புவோர் சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் மு.ப. 10 - பி. ப. 3 மணிக்கு மிடையில் நேரில் வரவும். (கிழமைநாட்களில் இந் நிறுவனம் மூடியிருக்கும்) மாணவிகளின் வசதிக் கேற்ப குறுகியகால வகுப்புக்கள் ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்.

3005 நிர்வாகி.

## நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அமரர் தில்லைநாதன் கமலநாதன் (இராசன்)

தோற்றம்: 19-1-62 மறைவு: 8-4-82

அன்புடையீர்

எமது குடும்பத்தின் சிரேஷ்ட புதல்வனின் ஈமக் கிரியைகளில் 9/10-4-82-ல் சிங்கப்பூரிலும், 11-4-82ல் இங்கும் நேரில் கலந்துகொண்டோர்க்கும், அனுதாபத் தந்தி மூலம் தெரிவித்தோருக்கும் எங்கள் மனமுவந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம். (7-5-82) வெள்ளிக்கிழமை காலை 9-00மணிக்குக் கீரிமலையில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும் (8-5-82) சனிக்கிழமை நடக்கவிருக்கும் வீட்டுக்கிருத்தியத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

சிறுப்பிட்டி தெற்கு, நீர்வேலி. இங்ஙனம் தில்லைநாதர் குடும்பத்தினர்

3096

## நீதிமன்ற விற்பனவு விளம்பரம்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்

இல ந. சோ/4599.

1. சபாபதிப்பிள்ளை அருநந்தி சீவரத்தினம்
2. சபாபதிப்பிள்ளை இராமநாதன் இருவரும் இணுவில்

— மனுதாரர்கள்.

மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில் எனக்குக் கிடைத்த நீதிமன்றக்கட்டளைப்படி பின்னல் விபரிக்கப்படும் ஆதனம் 1982-ம் ஆண்டு ஆனி மாதம் 16-ம் திகதி (1982-6-16) புதன்கிழமை முற்பகல் 10.30 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று என்னல் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

குறிந்த ஆதனடாப்பு

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்குப்பகுதி உடுவில் கோவிற்பற்று இணுவில் இறை ''கட்டுப்புலானையும் நிம்பத்தையும்'' நி. பர. 2 இது 30.5.81ல் உத்தரவு பெற்ற உலாந்தா ரி. அருமைநாயகம் அவர்களால் தயாரிக்கப்பட்ட 1629-ம் இலக்கப்படத்தில் 1-ம் துண்டாகக் காட்டப்பட்டுள்ளது. இதுவும் கடைக்கட்டிடங்களும், கிணறும், தென்னைகளும் மற்றும் அதைச் சேர்ந்தவைகளும் எல்லை கிழக்கும் வடக்கும் குறித்தபடத்தில் 2-ம் துண்டு. மேற்கு யாழ்ப்பாணம்-காங்கேசன்துறை றோட்டு, தெற்கு மக்கிளோய்ட் ஆஸ்பத்திரி இதடங்கலும் இதைச் சேர்ந்தவைகளும்.

சி. ஆ. த. வடிவேலு ஜே. பி.
L. I. V., S. C. V.
நீதிமன்ற விற்பனவு ஆணையாளரும், விலைமதிப்பாளரும்.

''வடிவேல் உதயம்''
காகேசன்துறை வீதி,
கோண்டாவில், 24-4-82.
3108

# 6 சாக்குகளில் வந்த ரூ. 6லட். வெளிநாட்டுப்பணம்?

## சபையில் விஜயசிறி-அனுரா விவாதம்

(கொழும்பு)

6 சாக்கு மூடைகளில் வெளிநாட்டுப் பணம் 6 லட்சம் ரூபா றெஸ்மீட் பிளேஸில் உள்ள வீடு ஒன்றுக்கு இரவு நேரத்தில் கொண்டுவரப்பட்டதாக ஹரிஸ்பத்துவ 2வது எம். பி. திரு. ஆர். பி. விஜயசிறி நேற்று முன் தினம் பாராளுமன்றத்தில் தெரிவித்ததையடுத்து திரு. விஜயசிறிக்கும் திரு. அனுரா பண்டாரநாயக்காவுக்குமிடையே பலத்த வாக்குவாதம் இடம்பெற்றது.

விபரம் வருமாறு:

விஜயசிறி; இந்த நாட்டில் மக்கள் விடுதலை முன்னணிக்கு மட்டுமே வெளிநாட்டு நிதியுடன் தொடர்பு உண்டென்று கூறப்படுகிறது. கடந்த செப்டம்பர் மாதம் ஒரு நாள் இரவு றெஸ்மீட் பிளேஸில் உள்ள ஒரு வீட்டுக்குள் மங்கிய வெளிச்சத்துடன் வந்த காரிலிருந்து 6 சாக்குகளில் வெளிநாட்டுப் பணம் கொண்டுவரப்பட்டது. அப்பண மூடை ஒன்றைத் தூக்குவதற்கு இருவரே மிகவும் சிரமப்பட்டனர். அன்றிரவு இதைப் பார்த்த திரு அனுரா பண்டாரநாயக்கா, திருமதி ரஞ்சி மைத்திரிபாலாவுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு ரஞ்சி முக்கியமான விஷயம் ஒன்று நடந்துள்ளது. நாளை விபரமாகக் கூறுகிறேன் என்றூர்

அப்போது குறுக்கிட்ட திரு. அனுராபண்டார நாயக்கா, இதில் எதுவித உண்மையும் இல்லை இது உண்மைக்குப் புறம்பானது என மறுப்புத் தெரிவித்தார்.

விஜயசிறி: இவரே அனுரா இதை எனக்குச் சொன்னூர். ஒரு சாக்கில் ஒரு லட்சம் ரூபா இருந்தது. வெளிநாட்டிலிருந்து வந்தபணம்.

திரு. அனுரா இக்கூற்றுக்களை மீண்டும் மறுக்கிறூர்.

சபாநாயகர்: உமது கூற்றுக்களை அவர் மறுக்கிறூர் நேற்றும் இதுபற்றி குறிப்பிட்டிருந்தீர்தானே.

விஜயசிறி: நேற்றுஇதுபற்றி குறிப்பிட்டதாகஞாபகமில்லை.

சபாநாயகர்: எனது ஞாபகத்திற்கு எட்டியபடி நீர் நேற்றும் இது பற்றி கூறியுள்ளீர். அவரும் இதனை மறுக்கிறூர். எனவே இதனை இத்துடன் நிறுத்தும்.

பிரதமர்: பிரதமர் என்ற ரீதியில் கூறுகிறேன். இது ஒரு பாரதூரமான விஷயம். எனவே இது குறித்து தனியான பிரேரணை ஒன்றைசபையில் கொண்டு வாரும். (ம-இ)

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றம்

காரைநகர், அறுகம்புலத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற தில்லைநாதன் செந்தில்நாதன் என்பவரது மரணசாதனமில்லாச் சொத்தின் விடயத்தில் மரணமெய்தியவர்

வழ. இல: ரி/3661

நடராஜா மகள் திரிபுரசுந்தரி, 78, கே. கே. எ . றோட் (கணேசன் ஸ்ரோர்ஸ்), யாழ்ப்பாணம்.

மனுதாரர்

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணச் சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ள தென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1982ம் ஆண்டு ஆனி மாதம் 11ந் திகதியன்று முற்பகல் 9 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகா தென்பதற்குக் காரணங் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப் படுகின்றூர்.

1982ம் ஆண்டு பங்குனி மாதம் 8ந் திகதி.

மன்றின் கட்டளைப்படி
ஒப்பம்
தா. குலஞானம்
பதிவாளர்.

வரைதல்
ஒப்பம்
செ. மகேசன்
மனுதாரின் சட்டத்தரணி.
3097

## பனம்பொருள் விற்பனை நிலையம்

[மன்னர்]

மன்னர் கடைவீதியில் பனம்பொருள் அபிவிருத்தி சபையினரால் பனம்பொருள் விற்பனவு நிலையம் ஒன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது. பனை ஓலையால் செய்யப்பட்ட பெட்டி, பாய், ஆகியனவும் பனம்பழ ரசம், பனம்பழ ஜாம், பனம்பழப்பாணி ஆகியனவும் விற்பனைக்காக வைக்கப் பட்டுள்ளன.

## வேலைவாய்ப்புக்கள்

உடனடியாக 150 வேலையாட்கள் தேவை. தினசரி 200 ரூபா சம்பாதிக்கலாம்.

பணிப்பெண்கள், மேசன், தச்சுவேலைகள், சாரதிகள், ஹோட்டல் வேலையாட்கள், மெக்கானிக்கர்கள் பிளம்பர், ஆகிய பலதரப்பட்ட வேலைகளுக்கும் நேரில் அல்லது தபால் மூலம் விண்ணப்பிக்கவும்.

சுபாஷினி அச்சகம்,
353A, 355A கே. கே. எஸ். வீதி,
(மேல்மாடி), யாழ்ப்பாணம்.
3109

## களஞ்சியப் பொறுப்பாளர் வேவை

யாழ்ப்பாணத்திலுள்ள பிரபல வர்த்தக ஸ்தாபனத்தின் விநியோக களஞ்சியத்திற்கு பொறுப்பாளர்தேவை. யாழ், நகரத்தில் அல்லது அண்மையிலுள்ள 55 வயதில் இளைப்பாறிய திறமையுள்ள அரசாங்க ஊழியர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகிறது. களஞ்சிய அனுபவம் விரும்பத்தக்கது. நியமிக்கப்படுபவர் பிணைப்பணம் கட்ட வேண்டும். மாத வேதனமாக ரூ. 600/- கொடுக்கப் படும். எழுத்து மூலம் மாத்திரமே தொடர்புகொள்ளலாம்.

விளம்பர இல: 0142
C/o ஈழநாடு லிமிட், யாழ்ப்பாணம்.

# வரி விளம்பரம்

### பயிற்சி

றேடியோ - டெலிவிஷன் எலக்றிக் வயரிங் வகுப்புகள் பூரணபயிற்சியுடன் 12-05-82ல் ஆரம்பமாகின்றன. சான்றிதழ்கள் வழங்கப்படும். கே. ஜீஸ் இன்ஸ்ரிரியூட், 37, (351) மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். 3094

### வாடகைக்கு

யாழ். பெருமாள் கோவிலடியில் சகல வசதிகளும், சாப்பாட்டுடன் மாணவிகளுக்கு மாத்திரம் தங்குவதற்கு இடமுண்டு. விபரங்களுக்கு: செயலாளர், மல்ரி சேவிஸஸ், 234, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 3088

### விற்பனைக்கு

மானிப்பாய் மேதர்ஸ் ஒழுங்கையில் திரு. பத்மராஜாவுக்குச் சொந்தமான வெறும் காணியில் மூன்று பரப்பு விற்பனைக்குண்டு. தொடர்பு; பி. பாலசுப்ரமணியம், 15, அம்மன்கோவில் வீதி, கொக்குவில் கிழக்கு. 3081

### வகுப்பு

எயர் கொண்டிசன் புதிய வகுப்பு 10 - 5 - 82 - ல் ஆரம்பமாகின்றன. விபரங்கட்கு:- Auto Cool Engineers, கந்தப்பசேகரம் வீதி (சாந்தி சினிமா முன்பாக) யாழ்ப்பாண்ம். 3085

### தேவை

Refrigerator Technicians குளிர்சாதனப்பெட்டி மெக்கானிக்குகள். குளிர்சாதனப் பெட்டிகள் திருத்துவதிலும், பெயின்ற் அடிப்பதிலும் நன்கு அனுபவமுள்ள மெக்கானிக்குகள் உடன் தேவை. திருப்திகரமாகச் சேவை செய்தால் உற்பத்திச்சாலையில் பயிற்சி அளிப்பதற்குக்கூட ஒழுங்கு செய்யப்படும். அனுபவத்தையும், எதிர்பார்க்கும் சம்பளத்தையும் குறித்து, நற்சான்றிதழ்களுடன் எழுத்து மூலம் விண்ணப்பிக்கவும்; 484, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 3095

காய்ந்த, சுத்தமான இலுப்பைப் பூ தேவை. எஸ். சுப்பிரமணியம் கொம்பனி, 191, (53) காங்கேசன்துறைவீதி, யாழ்ப்பாணம். 3072

### ST. JOHN'S COLLEGE, JAFFNA.

Applications are invited for a two Years Diploma Course in Automobile Engineering leading to Membership Examinations of the Institute of the Motor Industry, London.

Qualifications :

At least five passes at the NCGE or GCE Ordinary Level Examination with English and Mathematics.

Medium :

English and Tamil.

Fees :

Rs. 700/- per year or Rs. 250/- per term.

Mode of Selection :

Written Test in English and Interview.

Apply on or before the 20th May, 1982 enclosing a Postal Order or Money Order for Rupees Ten (examination fee) payable to the Principal.

PRINCIPAL.
3100

## "சிவகுமார் வெளியில் விடப்பட்டால் சாட்சிகளுடன் தொடர்பு கொள்ளலாம்"

(5-ம் பக்கத்தொடர்ச்சி)

சிவகுமார் வெளியில்விடப்பட்டால் அவர் சாட்சிகளுடன் தொடர்புகொள்ளலாம். குற்றவியல் நடவடிக்கைச் சட்டம் 41-ம் பிரிவின்கீழ் ஒரு நீதவானுக்குத் தனது நியாயாதிக்கத்திற்குள் ஒருவருக்கு எதிராக ஏற்பட்ட சூழ்நிலையில் சட்டரீதியாக பிடியாணை பிறப்பிக்கப்பட்டும் அதிகாரம் இருந்தால் அவரைக் கைது செய்ய, கைது செய்யும்படி உத்தரவிட நீதிமன்ற நீதவானுக்கு அதிகாரம் உண்டு. ஆகவே இந்தச் சந்தேகநபர் விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

ஒருவரை விளக்கமறியலில் வைக்கும்போது கைதுசெய்துதான் விளக்கமறியலில் வைக்கப்படும். நீதவான் பணிப்பின்படி அவர் எவராலும் கைது செய்யப்படலாம். அவரை விளக்கமறியலில்வைக்கும்முன் அவரிடம் விளக்கமறியல் வைக்கப்படுவதற்கான காரணம் எடுத்துக்கூறப்பட்டது. ஆகவே விளக்கமறியலில் வைக்கும்படி கொடுக்கப்பட்ட உத்தரவை மறுபரிசீலனை செய்யும்படி கோரிய விண்ணப்பத்தை நிராகரிக்கிறேன். எனது அபிப்பிராயத்தின்படி சந்தேகநபரை விளக்கமறியலில் வைக்கப்பட்டது சட்டரீதியாகும். விசாரணை இம்மாதம் 14ம் திகதி தொடர்ந்து நடைபெறும்.

### சேரி ஒழிப்புத் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட

## சில்லாலை வீடுகள்: 14-ல் விசாரணை

(பண்டத்தரிப்பு)

சேரி ஒழிப்புத்திட்டத்தின் கீழ் உள்ளூராட்சி அமைச்சின் நிதி உதவி மூலம் பண்டத்தரிப்பு பட்டின சபைப் பிரேதேசத்திலுள்ள சில்லாலையில் நிறுவப்பட்ட நான்கு வீடுகளும் விரைவில் இப்பகுதியிலுள்ள வீடற்றவர்களுக்கு வழங்கப்படவுள்ளன.

இவ்வீடுகளுக்கு விண்ணப்பித்திருக்கும் வீடற்ற மக்களின் மத்தியிலிருந்து தகுதியானவர்களை தெரிவு செய்வதற்கான நேர்முக விசாரணை இம்மாதம் 14-ம் திகதி யாழ் மாவட்ட அபிவிருத்தி சபையின் பண்டத்தரிம்பு உப அலுவலகத்தில் நடைபெறவுள்ளது. யாழ் உதவி உள்ளூராட்சி ஆணையாளர் மானிப்பாய் பிரிவு சுகாதார வைத்திய அதிகாரி ஆகியோர் இந்த நேர்முக விசாரணை நடாத்தி தகுதியானவர்களை தெரிவு செய்வார்கள் என்று பண்டத்தரிப்பு பட்டின உபஅலுவலக நிர்வாக மேற்பார்வையாளர் திரு. எம். மயில்வாகனம் தெரிவித்தார்,

## இப்படியும் நடக்கிறது

பிரபல இந்திய நாட்டியப்பேரொளி டாக்டர் செல்வி பத்மா சுப்பிரமணியத்தின் நடனத்தை யாழ். மக்கள் நேற்றிரவு முழு நிறைவுடன் கண்டு மகிழ்ந்தனர். அந்த முத்திரைகள் இருக்கிறதே...அற்புதம்.

வெளிவராத செய்தி: செல்வி பத்மா சுப்பிரமணியத்தை யாழ். நகருக்கு அழைத்துவர பகீரதப் பிரயத்தனம் மேற்கொள்ளப்பட்டபோது, காலமும் நேரமும் சதி செய்தது ஒருபுறமிருக்க, உயர்மட்ட 'புறக்கணிப்பு'ம் தீவிரமாசப் பின்னணியில் செயல்பட்டதாம்!

யாழ். நகருக்கும் கொழும்புக்குமிடையே தொலைபேசி அலறியதுதான் மிச்சம்!

எதுஎப்படியானலும்; இந்த மாநாட்டின் பக்கம் எட்டிப் பார்க்காத யாழ். மக்களின் ஒரு தாகம் நேற்றிரவு தீர்க்கப்பட்டுவிட்டது. 'ரூபவாஹினி'க்கு நன்றி

'ஊடுருவி',

### ஐக்கிய நலன்புரி ஆண்டு விழா

[பண்டத்கரிப்பு]

சங்கானை ஐக்கிய நலன்புரிச் சங்கத்தின் 10ஆவது ஆண்டு நிறைவு விழாவும் விளையாட்டுப் போட்டியும் நாளை நடைபெறவுள்ளது

சங்கத் தலைவர் திரு பா. பசுபதி தலைமையில்நடைபெறவுள்ள இவ்விழாவில் பிரதம விருந்தினராக வட்டுக்கோட்டை எம்.பி. திரு தா. திருநாவுக்கரசு கலந்துகொள்வார். வலிமேற்கு உதவி அரசாங்க அதிபர் திரு ஏ. செந்தில்வடிவேல், யாழ்ப்பாண மாவட்ட அபிவிருத்திசபை உறுப்பினர்களானதிரு சு நடேசுதிரு .ச பூபாலசிங்கம் சங்கானை கிழக்கு கிராமோதய சபைத் தலைவர் திரு.வை. செந்தில்நாதன் ஆகியோர் உட்படப் பலர் இவ்விழாவில் கலந்துகொண்டு உரையாற்றுவார்கள், பரிசில்களை வட்டுக்கோட்டை எம்.பி.யின் பாரியார் திருமதி கலைமகள் திருநாவுக்ரசு வழங்குவார். கலை நிகழ்ச்சிகளும்நடைபெறும்.

### ஆய்வரங்கு

(யாழ்ப்பாணம்)

இலங்கைச் சோதிட ஆய்வு மன்ற பொதுக்கூட்டம் இம்மாதம் ஒன்பதாம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை நல்லூர் ஞானசம்பந்தர் ஆதீன மண்டபத்தில் நடைபெறவுள்ளது. அன்றைய ஆய்வரங்கிற்கு பண்டிட் கே. என். நவரத்தினம் தலைமைதாங்குவார்.

### யாருடையது

[யாழ்ப்பாணம்]

யாழ்.காங்கேசன்துறை வீதி மகாராஜா ஸ்தாபனத்திற்கு முன்பாக ஒரு திறப்புக் கோர்வை வியாழக்கிழமை 6-ம் திகதி மாலை டி. பாலேந்திரன் என்பவரால் கண்டெடுக்கப்பட்டு ஈழநாடு காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் தகுந்த அத்தாட்சி காட்டிப்பெற்றுக் கொள்ளலாம். [ஆர்]

### மீண்டும் தடை!

(மன்னர்)

மன்னர் பட்டினத்திலுள்ள ஜெனரேட்டர் ஒன்று பழுதடைந்ததால் மன்னர் பட்டினத்தில் மீண்டும் மின்சாரம் தடைப்பட்டது.

கடந்த சில தினங்களாக மன்னர் பட்டினத்தில் ஏதாவது ஒரு பகுதி திடீர்திடீரென இருளில் மூழ்கிவருகிறது.

### இன்று

[யாழ்ப்பாணம்]

தேசிய இளைஞர் சேவை மன்றம் யாழ். மாவட்டம் தேசிய இளைஞர் கழக அங்குரார்ப்பணக்கூட்டம் இன்று பிற்பகல் ஆவரங்கால் இந்து இளைஞர் மன்றத்தில் திரு. இ. மயில்வாகனம் தலைமையில் நடைபெறவுள்ளது. ]வெ|

ஃ ஃ

[யாழ்ப்பாணம்[

யாழ். நகர் மின்சாரநிலைய வீதி புளுக்குத்தித் தோட்டம் ஸ்ரீஞானவைரவர் ஆலயத்தில் இன்றிரவு ''பக்திப்பாடல் அரசு,' ஏ. ஆர் ஸ்ரீகிருஷ்ணமூர்த்தி குழுவினரின் இசை நிகழ்ச்சியும் தொடர்ந்து வண்ணைக் கலைவாணர் நாடகமன்றம் அளிக்கும். இரா. பற்குணத்தின் ''செல்லப்பிள்ளை'' நாடகமும் நடைபெறும்.

### பிரதம...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

டதாக ஒரேயொரு பெண் நீதியரசரால் தெரிவிக்கப்பட்ட குற்றச்சாட்டையடுத்தே இவர்கள் இராஜினமாச் செய்துள்ளதாகக் கூறப்பட்டது.


மிகவும் குறைந்த விசேட விமானக் கட்டணங்கள்
யாழ்ப்பாணத்தில் மக்கினென்ஸ் வழங்குகிறது
★ சிங்கப்பூர் கூட்டாகச் செல்வோருக்கு
(GROUP TICKETS) மிகவும் கூடிய கழிவுடன்
மற்றும் ஃ மத்திய கிழக்கு ஃ லண்டன்
உலகின் எப்பாகத்துக்கும் விரும்பிய விமானத்தில் விமான டிக்கட்
அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் பிரதிநிதிகளான எம்மிடம்
வங்கியில் அறவிடும் அதே கட்டணத்தில் பிரயாணக் காசோலைகள்
(TRAVELLERS CHEQUES)
நாடுங்கள்
மக்கினென்ஸ் ட்றவல் சேவிஸ்(சிலோன்) லிமிட்
8, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
த: பெ. எண். 92, தொலைபேசி:8154



பேஜோ 404 விற்பனைக்கு
கம்பனிக்குச் சொந்தமான பேஜோ 404 விற்பனைக்குண்டு. அண்மையில் திருத்தியமைக்கப்பட்டு நல்ல நிலையில் உள்ளது.
பார்வையிடவும் விலை விபரத்திற்கும் 1982 மே 12-ந் திகதிக்குமுன் தொடர்புகொள்க.
விற்பனை முகாமையாளர்
த பினன்ஸ் கம்பனி லிமிட்டெட்
TFC
249, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி: 7680


## மரண அறிவித்தல்

### சுப்பையா தியாகராசா

சுருவிலைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், வேலணை மேற்கில் வசித்தவருமான சுப்பையா தியாகராசா காலமானர். இவர் விசாலாட்சியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற கோபாலபிள்ளை, இராமசாமி இரத்தினம், அருணுசலம், சிவசம்புவின் சகோதரரும், திருமதி படிகலிங்கம் வாலாம்பிகை, திருமதி பொன்னம்பலம் தில்லையம்மா, நாகையா, சண்முகம்பிள்ளை, திருமதி பாக்கியம் வைத்தியலிங்கம், நாகலிங்கம், படிகலிங்கம் ஆகியோரின் மைத்துனருமாவார். அன்னரின் ஈமக்கிரியைகள் 8-5-82 சனிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு வேலணை மேற்கில் நடைபெறும்.

3116

## மரண அறிவித்தல்

### கந்தையா நவரத்தினம்

உரும்பிராய் தெற்கு, வேம்பன் வீதியைச் சேர்ந்த கந்தையா நவரத்தினம், (இளைப்பாறிய தலைமைலிகிதர் இந்துரான எஸ்டேட், ருவான்வெல) காலமாகிவிட்டார். இவர் சரஸ்வதியின் அன்புக் கணவரும், சிவமலரின் அன்புத் தந்தையும், வெற்றிவேலுவின் மாமனும், பரமேஸ்வரி, பாலசிங்கம், விக்கினேஸ்வரன் ஆகியோரின் மைத்துனரும், சுப்பிரமணியத்தின் சகலனும், மனோகரபூபன், மோகன, மகேந்திரராசா ஆகியோரின் சிறிய தகப்பனரும், ஜெயன், மகிந்தன் ஆகியோரின் பேரனுமாவார். அன்னரின் ஈமக்கிரியைகள் வேம்பன் மயானத்தில் 7—5—82 வெள்ளிக்கிழமை பி. ப. 3 மணிக்கு நடைபெறும். உற்றூர், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

3117

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1982 ஆம் மே மீ 7-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number Q.B. 100236/81.
Eelanadu—P. O. Box 49, Telegram: 'Eelanadu' T'phone: 389 and 8126.